இயல் நான்கு

# இலக்கணவியல்

PCJQW7

மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் ஒரு கருவியே இலக்கணம். அக்கருவியானது, நம் அறிவையும் திறனையும் வளர்த்தெடுப்பதோடு, ஆர்வத்தையும் ஊட்டுதல் வேண்டும். அவற்றிற்கேற்ப, இவ்வியல் அமைந்துள்ளது; புதிய நோக்கில், பல்வேறு புதிய சிந்தனைகளைத் தூண்டி, இலக்கண ஆய்வுக்கு நம்மை அழைத்துச்செல்கிறது. இவ்வியலில் மொழியியல், ஒப்பியல், திறனாய்வியல் ஆகிய களங்களில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

தமிழ், ஆங்கில மொழிகளின் தொடரமைப்புக் கூறுகள், சொற்பொருள் மாற்றம் குறித்த சுவையான செய்திகள், சொற்களுக்குரிய வேர்மூலங்கள், இலக்கிய வளர்ச்சிக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் துணைசெய்யும் திறனாய்வுக்கலை ஆகிய கட்டுரைகள், எளிமையாகவும் சுருக்கமாகவும் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழ், ஆங்கில மொழிகளின் தொடரமைப்புக்கூறுகளை ஒப்பிடும் திறன் பெறுதல்.
- ஒரு சொல், சூழலுக்கேற்பப் பொருள்கொள்ளும்முறை குறித்து அறிந்துகொள்ளுதல்.
- மொழியியல் ஆய்வில், வேர்ச்சொல் ஆய்வின் இன்றியமையாமையைத் தெரிந்துகொள்ளுதல்
- திறனாய்வு வகைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளுதல்
- பாடல்கள், புனைகதைகள் போன்றவற்றைத் திறனாய்வு செய்யும் திறன் பெறுதல்.

## பாடப் பகுதி

- தமிழ், ஆங்கிலம் – தொடரமைப்பு ஒப்பீடு
- பொருண்மையும் சொற்பொருள் மாற்றமும்
- வேர்ச்சொல் ஆய்வு – ஓர் அறிமுகம்
- திறனாய்வு



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 165 04-04-2020 15:03:58

இயல்
நான்கு

# தமிழ், ஆங்கிலம் – தொடரமைப்பு ஒப்பீடு

## அறிமுகம்

ஒரு மொழியின் பல்வேறு நிலைகளை அறியவும் அதனோடு தொடர்புடைய பல மொழிகளின் இயல்புகளை அறியவும் ஒப்பீடு தேவைப்படுகிறது. மொழிகளை ஒப்பிடுதல், அவற்றிற்கிடையேயுள்ள தொடர்புகளைக் காணல், அத்தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, மொழிகளைத் தனிக் குடும்பமாகப் பிரித்தல், அவற்றை ஒப்பிடுதல், ஒரு மொழிக்குடும்பத்தில் அமையும் கிளைமொழிகளுக்கு இடையேயுள்ள தொடர்பை விளக்குதல் ஆகிய செயல்கள் யாவும் ஒப்பீட்டுமுறை ஆய்வாலேயே நிகழ்கின்றன.

இப் பாடப்பகுதி தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளின் சில தொடரமைப்புக் கூறுகளை ஒப்பிட்டுக்காட்டுகிறது. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் படிக்கும் மாணாக்கர்களுக்கு இவ் ஒப்பீடு, அதன் தொடரமைப்புக் கூறுகளை எளிமையாகப் புரிந்துகொள்ள உதவும்.

## திராவிடமொழிக் குடும்பத்தில் தமிழ்

திராவிடமொழிக் குடும்பத்தில், இருபத்து மூன்றிற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் ஒன்றாகிய தமிழ்மொழி, மற்ற திராவிட மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகிறது.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து..."

என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில், பனம்பாரனார் தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பு குறித்துக் கூறியுள்ளார். வடக்கில் வேங்கடமலை, தெற்கில் குமரியாறு ஆகியவற்றை எல்லையாகக் கொண்டு, தமிழ்மொழி பேசப்பட்டு வந்துள்ளதாக அறியமுடிகிறது.

இன்றைய காலக்கட்டத்தில், இந்தியாவில் மட்டுமன்றி இலங்கை, மியான்மர், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா முதலிய உலக நாடுகளிலும் தமிழ்மொழி பேசப்படுகின்றது.

"திராவிட மொழிகள் மிகப்பழைமையான மொழிகள் என்பதும் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இந்திய நாட்டில் வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதும் மொழியியலார்களின் கொள்கை. இந்தோ – ஆரிய மொழியாகிய இன்றைய சமற்கிருதம், இந்நாட்டில் நுழைவதற்கு

### அறிவோம் தெளிவோம்

**தமிழின் சிறப்பைப் பற்றி மேலைநாட்டினர் கருத்துகள்**

தமிழே மிகவும் பண்பட்ட மொழி; தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி – மாக்ஸ்முல்லர்

ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தைத் தெரிவிப்பதாகவும் விளங்குவதில் தமிழ்மொழியை எம்மொழியாலும் விஞ்சமுடியாது; உள்ளத்தின் பெற்றியை உள்ளவாறு எடுத்துக்காட்டுவதில் தமிழ்மொழிக்கு ஈடாக எம்மொழியும் இயைந்ததாக இல்லை – பெர்சிவல்

வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருக்கின்றன – ரைஸ்டேவிஸ்

இப்போது வழங்கும் எல்லா மொழிகளிலும் தமிழே மிகப் பழைமையானது – ஈராஸ் பாதிரியார்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 166 04-04-2020 15:03:58

முன்னாலேயே திராவிடமொழிகள் வழக்கில் இருந்துள்ளன" என்று, மொழியியல் அறிஞர் ச. அகத்தியலிங்கம் கூறியிருப்பது இங்கு எண்ணத்தக்கது.

வடமொழியின் முதற்காவியம், வால்மீகியின் இராமாயணம் என்று கூறுவர். இதில், தமிழ் வளர்த்த பாண்டியர் பற்றிய குறிப்பு வருகின்றது. வியாச முனிவரும் மகாபாரதத்தில், தமிழ்நாட்டின் சிறப்பையும் பாண்டிய அரசின் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார். இவையாவும் தமிழின் தொன்மைச் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

### இந்தோ – ஐரோப்பியமொழிக் குடும்பத்தில் ஆங்கிலம்

இந்தோ – ஐரோப்பிய மொழிக்குடும்பத்தில், ஏறக்குறைய நானூறு கோடி மக்களால் பேசப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இந்தப் பெருமொழிக்குடும்பத்தில் ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரெஞ்சு, போர்த்துகீசியம், ஜெர்மனி, இத்தாலி, இரஷ்யா, பார்சி, இந்தி, உருது முதலான மொழிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் உலகெங்கும் பேசப்படும் பன்னாட்டு மொழியாகவும் இணைப்புமொழியாகவும் ஆங்கிலமொழி விளங்குகிறது. ஐக்கிய நாடுகள், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆசுதிரேலியா, அயர்லாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளின் முதன்மைமொழியாக ஆங்கிலம் உள்ளது.

உலகில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் மொழிகளின் வரிசையில், முதலில் மாண்டரின் சீனமொழியும் இரண்டாவதாக ஸ்பானிய மொழியும் மூன்றாவதாக ஆங்கிலமும் உள்ளன. உலக மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் ஆங்கிலம் பேசுபவர்களாக உள்ளனர். அறுபத்தேழு நாடுகளில், அரசு அலுவல் மொழியாக ஆங்கிலம் பயன்படுகிறது.

ஆங்கிலம் (English) என்பதன் மூலச்சொல், ஏங்கில்ஸ் (Angles) என்னும் பெயரிலிருந்து பெறப்பட்டதாகும். இங்கிலாந்தில் வாழ்ந்த ஆங்கிலோ–சாக்ஸன் என்ற சிறு குழுவினரால் பேசப்பட்ட ஆங்கிலம், இன்று உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

ஆங்கில மொழியிலுள்ள பெரும்பான்மையான சொற்கள், இலத்தின் மொழியிலிருந்தும் கிரேக்க மொழியிலிருந்தும்

#### தெரியுமா?

#### மொழிநிலைகள்

சொல்லமைப்பின் அடிப்படையில், மொழிநிலைகள் மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை தனிநிலை, உட்பிணைப்பு நிலை, ஒட்டுநிலை என்பன.

#### தனிநிலை (Isolative language)

சொற்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல், தனித்தனியாக நின்று பொருள் உணர்த்துவது, தனிநிலை அமைப்பு. சீனம், சயாம், பர்மியம், திபெத்து ஆகிய மொழிகள் தனிநிலை அமைப்புடையவை.

எ.கா. சீன மொழியில், மின் என்னும் சொல் மக்களைக் குறிக்கும். லிக் என்னும் சொல், வலிமையைக் குறிக்கும். இரண்டும் சேரும்போது, மின்லிக் (மக்கள் வலிமை), மின் சிலிக் (மக்களுடைய வலிமை) என்பதைக் குறிக்கும். சி என்பது அம்மொழியில் வெறுஞ்சொல்.

#### உட்பிணைப்புநிலை (Inflectional language)

அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது, இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்பது, உட்பிணைப்புநிலை அமைப்பு. ஐரோப்பிய மொழிகள் உட்பிணைப்பு நிலையைச் சார்ந்தவை.

எ. கா. 'Such', 'Which' என்னும் ஆங்கிலச் சொற்கள், So–like, Who– like என்பனவற்றின் உட்பிணைப்பு.

#### ஒட்டுநிலை (Agglutinative language)

அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது, ஒன்று சிதைந்தும் மற்றொன்று சிதையாமலும் நிற்பது, ஒட்டுநிலை அமைப்பு. உலகிலுள்ள பெரும்பான்மையான மொழிகள் இவ்வகையின. திராவிட மொழி, சித்திய மொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிஷ் மொழி, பாஸ்க் மொழி, ஆப்பிரிக்கப் பழங்குடி மக்களின் பண்டு மொழி, மலேசிய பாலினேஷியன் மொழி முதலான பல மொழிகளும் ஒட்டுநிலையைச் சார்ந்தவை.

எ.கா. பார் என்னும் அடிச்சொல்லோடு இடைநிலை, விகுதி போன்ற இடைச்சொற்கள் ஒட்டி வருகின்றன.
பார் + த் + த் + ஆன்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 167 04-04-2020 15:03:59

உருவானவை. இன்றைய பயன்பாட்டில் இருக்கும் நவீன ஆங்கிலம், பல்வேறு மொழிகளிலுள்ள வழக்குச்சொற்களைக் கொண்டுள்ளது. தொலைதொடர்பு, அறிவியல், செய்தித் தொழில்நுட்பம், வணிகம், மருத்துவம், அரசியல், கணினியியல் முதலிய பல்வேறு துறைகளில் ஆளுமைமிக்க மொழியாகவும் ஆங்கிலம் விளங்குகிறது.

வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், வரைகலை, இணையம் போன்ற பல்வேறு ஊடகத் தொழில்நுட்பங்களில் ஆங்கிலம் இன்றியமையாததாக உள்ளது. எடுத்துக்காட்டாக,இணையம்இயங்கும்பல்வேறு நெறிமுறைகள் (Protocols), வலைத்தளங்கள் கட்டமைக்கப்படும் குறியீட்டு மொழிகள் (Markup Languages), நிரல் மொழிகள் (Programming Languages) ஆகியவை ஆங்கிலத்திலேயே உள்ளன.

### பயிற்றுமொழிகள் – தமிழ், ஆங்கிலம்

தமிழகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தாய்மொழி, முதல்மொழியாகவும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் (Second Language) பயிற்றுவிக்கப்படுகின்றன. பல பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தாய்மொழியும் ஆங்கிலமும் பயிற்றுமொழிகளாக (Medium) உள்ளன. பெரும்பான்மையாகப் பொறியியல், மருத்துவம்சார்ந்த படிப்புகளில் ஆங்கிலமே பயிற்றுமொழியாக உள்ளது.

ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், புதிதாக மற்றொரு மொழியைக் கற்கும்போது, தம் தாய்மொழியோடு ஒப்பிட்டுப் பார்ப்பது இயல்பு. ஆங்கிலம் ஒரு மொழியாக மட்டுமன்றிப் பாடமாகவும் கற்பிக்கப்படுவதால் தமிழோடு ஆங்கில ஒப்பீடு இன்றியமையாததாக உள்ளது.

மாணாக்கர், ஆங்கிலப்பாடத்தைக் கற்கும்போது, அதன் மொழிக் கட்டமைப்புகளையும் இலக்கணக்கூறுகளையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் Active Voice, Passive Voice தொடர்களைப் படிக்கும் மாணாக்கர், தமிழின் செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களை நினைவுகூர்வர்.

ஆங்கிலத்தில் Adjective, Adverb பற்றிப் படிக்கும்போது, தமிழின் பெயரடையும் வினையடையும் நினைவுக்கு வரும். (பதினோராம் வகுப்பில் படித்ததும் நினைவுக்கு வரும்.)

### தெரியுமா?

ஆங்கிலம், 146 மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியுள்ளதென ஒரு கணக்கெடுப்பின்படி அறியமுடிகிறது. தமிழிலிருந்து ஆங்கிலம் பெற்றுக்கொண்ட சில சொற்கள் பின்வருமாறு:

| தமிழ் | English | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| அணைக்கட்டு | Anicut | தேக்கு | Teak |
| காசு | Cash | ஓலை | Olla |
| கட்டுமரம் | Catamaram | மிளகுத் தண்ணீர் | Mulligatanney |
| கறி | Curry | கூலி | Coolie |
| மாங்காய் | Mango | பச்சிலை | Patchouli |
| தோப்பு | Tope | பலகணி | Balcony |
| பப்படம் | Poppadam | சந்தனம் | Sandal |



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 168 04-04-2020 15:03:59

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளைப்பற்றிய ஒப்பீடு என்பது, மிகப்பெரிய களமாக விளங்குகிறது. அதனைச் சில பக்கங்களுக்குள் அடக்க முடியாது. ஆகவே, இவ்விரு மொழிகளிலுமுள்ள சில தொடரமைப்புக்கூறுகள் மட்டும் ஒப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவையாவும் எளிமையாகவும் சுருக்கமாகவும் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன.

## தமிழ், ஆங்கிலம் – தொடரமைப்பு ஒப்பீடு

சொற்கள் முறைப்படி அமைந்து,பொருளைத் தரும்போது, அது சொற்றொடராகிறது. அச்சொற்றொடர், மரபுநிலை பிறழாதவாறும் அதனைப் பேசுவோர், கேட்போர் ஆகியோரின் மனநிலைக்கு ஏற்றவாறும் அமையும்போது, கருத்துப் பரிமாற்றம் எளிதாகிறது.

இம்மரபு, எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஏனெனில், மொழிக்குமொழி மரபுநிலை மாறுபடுவது இயல்பே. எடுத்துக்காட்டாக வினைமுற்றுகள், ஆங்கிலத்தில் தொடரின் இடையிலும், தமிழில் தொடரின் இறுதியிலும் நிற்கின்றன.

எ.கா.

செல்வி படம் வரைந்தாள் (த) – (வினைமுற்று, தொடரின் இறுதியில் நின்றது.)

*Selvi drew a picture* (ஆங்.) – (வினைமுற்று, தொடரின் இடையில் நின்றது.)

அதேபோல், திராவிட மொழிகளில் வினையடிகள், இடைநிலைகள் போன்றவை ஒட்டுநிலையில் நிற்க, சீனம் முதலான மொழிகளில் தனிநிலையாக நிற்கின்றன. தொடரமைப்பு நிலையில் காணும்போது திராவிட மொழிகள், இந்தோ – ஐரோப்பிய மொழிகளிலிருந்து பலவகையிலும் வேறுபடுகின்றன. இவற்றைப் பின்வரும் தலைப்புகளில் இனிக் காணலாம்.

1. தொடரமைப்பில் சொற்களின் நிலை
2. தொடரமைப்பில் இயைபு

## 1. தொடரமைப்பில் சொற்களின் நிலை

சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தருவதனைத் தொடர் என அறிந்துள்ளோம். ஒரு தொடரில், சொற்களின் வரிசை முன்பின்னாக மாறி வந்தாலும் அத்தொடரின் பொருண்மை மாறாது இருக்குமானால், அதனை அமைப்பு மாற்றம் என மொழியியலார் குறிப்பிடுகின்றனர். இது, பொதுவான விளக்கமாகும்.

தமிழில், முற்றுத்தொடர்களில் எழுவாய் முதலிலும், செயப்படுபொருள் இடையிலும், பயனிலை இறுதியிலும் இடம்பெறுகின்றன. ஆனால், ஆங்கிலத்தில் செயப்படுபொருள் தொடரின் இறுதியில் அமைகின்றது.

எ.கா.

நான் கடிதம் எழுதினேன் (த)

*I wrote a letter* (E)

தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகச் செய்யுள், கவிதை ஆகியவற்றில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இடம் மாறியும் அமைவதுண்டு. இவை, கவிஞர்களின் உணர்ச்சி வெளிப்பாட்டால் அமைவன.

எ.கா. 'கண்டனன் கற்பினுக் கணியை கண்களால் . . .' என்னும் கம்பராமாயணப் பாடலடியில், 'கண்டனன்' என்னும் வினைமுற்று, தொடரின் முதலில் வந்துள்ளது. இக் காலத்தில் உரைநடைகளிலும் செய்தித்தாள்கள் முதலான ஊடகங்களிலும் இதுபோன்ற தொடர்கள் பெரும்பான்மையாகப் பயின்று வருகின்றன. இவ்வகைத் தொடர்கள், பேச்சுத்தமிழில் இயல்பாகவே இடம்பெறுகின்றன. ஆனால், ஆங்கிலத்தில் மாறிவருதல் இயல்பில்லை.

இனி, தொடர்நிலையில் பெயரடை, வினையடை; பெயரெச்சம், வினையெச்சம்; முன்னொட்டு, பின்னொட்டு; உருபன்உறவு, இலக்கணஉறவு ஆகியவை அமையும் நிலை குறித்துக் காண்போம்.

## பெயரடையும் வினையடையும்

தொடரில் இடம்பெறும் பெயரைச் சிறப்பிக்க பெயரடையும், வினையைச் சிறப்பிக்க

வினையடையும் வருகின்றன. தமிழில் இவை, பெயருக்கு முன்பும் வினைக்கு முன்பும் பயின்று வரும்.

எடுத்துக்காட்டாக, 'அழகான மலர்' என்னும் தொடரில், 'அழகான' என்பது, பெயரடை. 'விரைவாக ஓடியது' என்னும் தொடரில், 'விரைவாக' என்பது வினையடை.

ஆங்கிலத்திலும் பெயரடை பெயருக்குமுன் வருகிறது. எ.கா. *beautiful flower*. இங்கு *beautiful* என்பது, பெயரடை. தமிழில் வினைக்குமுன் இடம்பெறும் வினையடை, ஆங்கிலத்தில் மட்டும் வினைக்குப்பின் பயின்று வருகிறது. எ.கா. *ran fastly*. இங்கு *fastly* என்பது, வினையடை.

## பெயரெச்சமும் வினையெச்சமும்

தமிழில், ஒரு தொடரில் எத்தனை எச்சங்கள் இருக்கின்றன எனக் கணக்கிட்டால், அத்தனை தனித்தனித் தொடர்கள் இணைந்துள்ளன என்பதை அறியலாம். எடுத்துக்காட்டாக,

அவன் வந்தான்

அவன் பார்த்தான்

அவன் சென்றான்

என்னும் மூன்று முற்றுத்தொடர்களையும் அவன் வந்து பார்த்துச் சென்றான் என (வினை) எச்சங்களால் ஆன முற்றுத்தொடராக்கலாம்.

ஆங்கிலத்திலும் இவை பல முற்றுத்தொடர்களைப் பெற்ற தொடராகக் கொள்ளும் பண்பு உண்டு.

*He came. He saw. He went.*

*He came, saw and went.*

தமிழில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படைத் தொடர்களை இணைத்து, ஒரே தொடராக மாற்றுவதற்கு எச்சங்கள் பயன்படுகின்றன. ஆனால், இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் இவ்விடத்தில் இணைப்பு இடப்பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆங்கில மொழியில் இரு தொடர்களை இணைக்க, இணைப்பு இடப்பெயர்கள் பயன்படுத்தப்படும் இடங்களிலெல்லாம் தமிழில் பெயரெச்சங்களையோ வினையாலணையும் பெயர்களையோ பயன்படுத்துவதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக, *I read a book, which was given by you* என்னும் தொடரில், *Which* (*Relative Pronoun*) என்பது, இணைப்பு இடப்பெயராகும். இதே தொடரைத் தமிழில், 'நீ கொடுத்த புத்தகத்தை நான் படித்துவிட்டேன்' எனக்கூறும்போது, 'கொடுத்த புத்தகம்' என்பது பெயரெச்சம் ஆகும்.

இவ்வாறே தொடரில் வினையெச்சமும் பயின்று வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, *Kannan came. Kannan went.* என்னும் இரு தொடர்கள் *Kannan came and went* என்று ஒரே தொடராக அமையலாம். ஆனால் தமிழில், கண்ணன் வந்தான்; கண்ணன் சென்றான் என்னும் இரு தொடர்கள், கண்ணன் வந்தானும் சென்றானும் என்று 'உம்'சேர்த்து எழுதப்படுவதில்லை. மாறாக, கண்ணன் வந்து சென்றான் என்று வினையெச்சத்தைப் பயன்படுத்தி எழுதப்படுகிறது.

## உருபன்கள் – முன்னொட்டும் பின்னொட்டும்

தமிழ்மொழி ஒட்டுநிலை மொழியாக, குறிப்பாகப் பின்னொட்டினை ஏற்கும் மொழியாக உள்ளது. ஆங்கில மொழியில் முன்னொட்டுகள் (*Prepositions*) அமையும் இடங்களிலெல்லாம் தமிழில் பின்னொட்டுகளே (*Postpositions*) அமைகின்றன. எடுத்துக்காட்டாக,

| தமிழ் | ஆங்கிலம் |
|---|---|
| மேசையின் மேல் | On the table |
| மேசையின்கீழ் | Under the table |

இதே போன்றுதான் வேற்றுமை உருபுகள் பின்னொட்டுகளாக உள்ளன. எ.கா. மரம் + கு = (மரம் + அத்து + கு) = மரத்துக்கு எனக் 'கு' உருபு பின்னொட்டாக அமைகிறது. ஆங்கிலத்தில் அது முன்னொட்டாகப் பயின்றுவருகின்றது. எ.கா. *to the tree*. இங்கு '*to*' என்பது, முன்னொட்டு.

## உருபன்உறவும் இலக்கணஉறவும்

ஆங்கிலத் தொடர்களில் சொற்களுக்கு இடையேயுள்ள உறவுகள், இலக்கணஉறவுகளாக



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 170 04-04-2020 15:03:59

(Grammatical Relation) அமைகின்றன. ஆனால், தமிழில் அவ்வுறவு, உருபன்களைச் சார்ந்து (Morphological Relation) அமைகின்றது. சொல்லமைப்பு திட்பமாக அமைந்த தமிழ்மொழி, ஒட்டுநிலை அமைப்பு உடையது. எனவேதான், தமிழில் சொற்களின் அமைப்புமுறை, நெகிழ்ச்சி உடையதாக உள்ளது. தொடரமைப்பு திட்பமாக உள்ள ஆங்கிலமொழியில், சொற்களின் அமைப்புமுறை நெகிழ்ச்சியற்றதாக உள்ளது. அதனால்தான், ஆங்கிலத்தில் ஒரு தொடரிலுள்ள சொற்களை இடம் மாற்றினால் பொருளும் மாறிவிடுகின்றது.

எ.கா.

வளவன் எழிலரசியை அழைத்தான் > எழிலரசியை வளவன் அழைத்தான்

(பொருள் மாறவில்லை.)

*Valavan called Ezhilarasi >*

*Ezhilarasi called Valavan*

(பொருள் மாறுகிறது.)

## 2. தொடரமைப்பில் இயைபு

தொடரமைப்பில் இயைபு என்பது, ஒரு தொடரில் அமைந்துள்ள சொற்களுக்கு இடையே காணப்படும் தொடர்பாகும். 'கண்ணன் வந்தான்' என்னும் தொடரில், 'கண்ணன்' என்னும் எழுவாய்க்கேற்ப 'வந்தான்' என்னும் வினைமுற்று (பயனிலை) வந்துள்ளது. இஃது, எழுவாய்க்கேற்ற இயைபாகும். இதுபோல் தமிழிலும் ஆங்கிலத்திலும் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றிற்கிடையே ஓர் இயைபு காணப்படுகிறது.

### திணை, எண், பால், இடம் – இயைபு

சொற்களுக்கிடையே ஏற்படும் பொருத்தப்பாடே இயைபு. ஆங்கில மொழியில் *She is a girl* என்பதும், *They are girls* என்பதும் சரியான பொருத்தப்பாடுடைய தொடர்களாகும். இவற்றை வினை இயைபு (*Agreement of the verb*) என்பர். *She are girl* என்றோ *They is girls* என்றோ பேசுவதும் எழுதுவதும் இல்லை. ஏனெனில், அவை தவறான தொடர்கள் மட்டுமன்றி, இயைபின்றியும் அமைவன. (*She – Singluar Noun, is – singular verb; They – Plural Noun, are – plural verb*)

❖ தமிழில் பெயரடைக்கும் அதனை அடுத்து வரும் பெயருக்கும் இடையே எண், பால் ஆகியவற்றில் இயைபு இல்லை. நல்ல பையன், நல்ல பெண் என்ற தொடர்களில் 'நல்ல' என்னும்

### அறிவோம் தெளிவோம்

இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரை உள்ள உருபுகள் முறையே ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவை, பின்னொட்டுகளாக வருவதனை அறிந்துள்ளீர்கள். இவை மட்டுமின்றி, வேறு சில உருபுகளும் உள்ளன. இவற்றை வேற்றுமைச்சொல் பின்னொட்டு அல்லது பின்னுருபு (Postpositions) என்கிறோம். இலக்கணநூலார், சொல்லுருபுகள் என்று கூறுகின்றனர். பின்னுருபுகள் அல்லது சொல்லுருபுகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு:

#### பின்னொட்டாக வரும் வேற்றுமை உருபுகள்

| | | |
|---|---|---|
| ஐ – மரத்தை | கு – மரத்துக்கு | அது – மரத்தினது |
| ஆல் – மரத்தால் | இன் – மரத்தின் | கண் – மரத்தின்கண் |

#### பின்னொட்டாக வரும் சொல்லுருபுகள்

| | |
|---|---|
| பற்றி – மரத்தைப்பற்றி | தவிர – மரத்தைத் தவிர |
| விட – மரத்தைவிட | கொண்டு – மரத்தைக்கொண்டு |
| போல – மரத்தைப்போல | வைத்து – மரத்தை வைத்து |



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 171 04-04-2020 15:03:59

பெயரடை, பெயர்களோடு இயைபு இன்றியே வருகின்றது. ஆங்கிலத்திலும் இவ்வாறே அமைகின்றது.

எ.கா.

*He is a good boy*

*She is a good girl*

❖ தமிழில் முற்றுத்தொடர்களின் இறுதியில் அமையும் வினைமுற்று வடிவங்கள், எழுவாயோடு எண் இயைபு கொண்டுள்ளன. எ.கா.

| சொற்றொடர் | எண் | இடம் |
|---|---|---|
| நான் வந்தேன் | ஒருமை | தன்மை |
| நாம் வந்தோம் | பன்மை | |
| நீ வந்தாய் | ஒருமை | முன்னிலை |
| நீர் வந்தீர் | பன்மை | |
| நீங்கள் வந்தீர்கள் | மரியாதைப் பன்மை | |

❖ படர்க்கை மூவிடப்பெயரின் வினைமுற்றுகள் எழுவாயோடு திணை, பால், எண், இடம் ஆகிய நிலைகளில் இயைபு கொண்டுள்ளன. இவற்றைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளால் அறியலாம்.

| சொற்றொடர் | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| அவன் வந்தான் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை |
| அவள் வந்தாள் | | பெண்பால் | ஒருமை | |
| அவர் வந்தார் | | பலர்பால் | பன்மை | |
| அது வந்தது | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை |
| அவை வந்தன | | பலவின்பால் | பன்மை | |

ஆங்கிலமொழியில், வினைமுற்றுகளில் பாலறி கிளவிகள் இணையும் மரபு இல்லாததால் வினைமுற்றுகள் திணை, பால் வேறுபாட்டைக் காட்டுவதில்லை. ஆனால், தமிழின் வினைமுற்று விகுதிகள் திணை, பால் வேறுபாட்டை உணர்த்துகின்றன. எ.கா.

நான் வந்தேன் – *I came*

நீ வந்தாய் – *you came*

அவன் வந்தான் – *He came*

அவள் வந்தாள் – *She came*

அவர்கள் வந்தார்கள் – *They came*

அது வந்தது – *It came*

ஆங்கிலத்தில் *came* என்ற வினைமுற்றே இரு திணை, ஐம்பால், மூவிடத்திற்கும் பொதுவாக வருவதைக் காணலாம்.

## எழுவாய், பயனிலை – இயைபு

❖ தமிழில் தோன்றா எழுவாய் கொண்ட தொடர்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக,

வீட்டுக்குப் போனேன்

பாடம் படித்தாய்

நாளை வருவார்

போன்ற தொடர்களில் எழுவாய் இல்லை. ஆங்கிலத்தில் எழுவாய், கட்டாயம் தோன்ற வேண்டும். இந்த விதிமுறையின் காரணமாக, எழுவாய் ஏற்காத வினைகளைக் கொண்ட ஆங்கிலத் தொடர்களில், *She, He, it, they* போன்ற பதிலிகள் எழுவாய் நிலையில் தோன்றுகின்றன.

எ.கா. *He came, She came, It came, They came.*



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 172 04-04-2020 15:03:59

## அறிவோம் தெளிவோம்

| வினைமுற்று | எழுவாய் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|---|
| விளையாடுவான் | அவன் | உயர்திணை | ஆண்பால் | ஒருமை | படர்க்கை | எதிர்காலம் |
| பாடுகின்றேன் | நான் | உயர்திணை | – | ஒருமை | தன்மை | நிகழ்காலம் |
| பேசினார்கள் | அவர்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | படர்க்கை | இறந்தகாலம் |
| வந்தது | அது | அஃறிணை | ஒன்றன்பால் | ஒருமை | படர்க்கை | இறந்தகாலம் |
| கொடுப்பாய் | நீ | உயர்திணை | – | ஒருமை | முன்னிலை | எதிர்காலம் |
| மேய்கின்றன | அவை | அஃறிணை | பலவின்பால் | பன்மை | படர்க்கை | நிகழ்காலம் |
| செய்வீர்கள் | நீங்கள் | உயர்திணை | பலர்பால் | பன்மை | முன்னிலை | எதிர்காலம் |
| gave | – | – | – | – | – | past tense |
| speaks | – | – | – | – | – | Present tense |

ஆகவேதான், தமிழ் முதலான திராவிட மொழிகளில் 'தோன்றா எழுவாயும்', ஆங்கிலம் முதலான இந்தோ – ஐரோப்பிய மொழிகளின் தொடரமைப்பில் 'பதிலி எழுவாய் இடுதல்' என்ற பண்பும் காணப்படுகின்றன.

❖ தமிழில் வினைச்சொற்கள் இல்லாமலும் தொடர்கள் அமைகின்றன. இத்தகைய தொடர்களில் பெயர்கள் பயனிலையாக வருவதுண்டு. இவை போன்ற தொடர்களுக்கு இணையாக ஆங்கில மொழியில் is, are போன்ற இணைப்பு வினைகள் சேர்க்கப்படுகின்றன.

எ.கா. அவன் இராமன் – He is Raman

### ஆங்கிலம், தமிழ் – தொடர்களை மொழிபெயர்க்கும்போது நேரும் தவறுகள்

தமிழையும் ஆங்கிலத்தையும் கற்கும் மாணாக்கர், தொடரமைப்புகளில் தம்மையறியாமல் சில தவறுகளைச் செய்கின்றனர். இஃது ஒரு மொழியின் தாக்கம், மற்றொரு மொழியின் மீது ஏற்படுவதனால் நேர்கிறது. எடுத்துக்காட்டாக ஆங்கிலத்தில், Niraimathi, Kavitha and Kumaran went to school என்னும் தொடரைத் தமிழில் நிறைமதி, கவிதா மற்றும் குமரன் பள்ளிக்குச் சென்றனர் என்று பேச்சிலும் எழுத்திலும் மாற்றுகின்றனர். 'and' என்னும் இணைப்புச்சொல்லுக்கு மாற்றாக, 'மற்றும்' என்னும் இணைப்புச்சொல்லைத் தமிழில் பயன்படுத்துகின்றனர். ஆனால், தமிழ்த் தொடரமைப்பில் ஒன்றிற்கு மேற்பட்ட பெயர்கள் இடம்பெறும்போது, அவையாவும் 'உம்' என்ற இடைச்சொல்லாலேயே இணைக்கப்படுகின்றன. ஆகவே, மேற்கூறிய தொடரை நிறைமதியும் கவிதாவும் குமரனும் பள்ளிக்குச் சென்றனர் எனப் பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்தவேண்டும்.

இதுபோன்று, ஆங்கிலத்தின் தாக்கத்தால் தமிழ்த்தொடரமைப்புகளில் ஏற்படும் தவறுகளைக் கண்டறிந்து. அவற்றைச் சரியான அமைப்பில் மாற்றுவதற்கு அறிதல் வேண்டும்.

### நிறைவுரை

திராவிடமொழிக் குடும்பத்தில் தமிழின் சிறப்புகளைப்பற்றியும் இந்தோஐரோப்பியமொழிக் குடும்பத்தில் ஆங்கிலத்தின் சிறப்புகளைப்பற்றியும் இப் பாடப்பகுதி சுருக்கமாக எடுத்துக்கூறுகிறது. தமிழிலும், ஆங்கிலத்திலும் தொடரமைப்பில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளைச் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது.

இப்பாடப்பகுதியின் வாயிலாக, ஒருமொழியுடன் மற்றொரு மொழியை ஒப்பிடுவதால் அவற்றின் அமைப்பு, செயல்முறை, மொழிக்கூறுகள், கட்டமைப்புகள், இலக்கணக் கூறுகள், மொழியின் பொதுமைப் பண்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. அதுமட்டுமன்றி, மொழியைப் படைத்த மனிதனின் கூரிய அறிவுத்திறத்தைக் கண்டு, நமக்கு வியப்பும் பெருமிதமும் ஏற்படுகிறது. மொழிக்கட்டமைப்பின் மீது மனிதன் கொண்டிருந்த ஈடுபாட்டையும் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 173 04-04-2020 15:03:59

## கண்ணாடி

**கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருக்கின்றன' என்று கூறியவர்

   அ) பெர்சிவல் ஆ) ரைஸ்டேவிஸ்

   இ) மாக்ஸ்முல்லர் ஈ) ஈராஸ் பாதிரியார்

2. பின்வருவனவற்றுள் திராவிட மொழிக்குடும்பத்தைச் சாராத மொழியைத் தேர்ந்தெடுக்க.

   அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) கன்னடம் ஈ) சீனம்

3. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று: ஆங்கிலமொழி, உட்பிணைப்பு நிலையைச் சார்ந்தது.

   காரணம்: ஆங்கில மொழியில், அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது ஒன்று சிதைந்தும் மற்றொன்று சிதையாமலும் நிற்கும்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

   இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி.

4. 'பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டார் கல்வி அலுவலர்' இத்தொடரில், வினைமுற்று எங்கு இடம்பெற்றுள்ளது?

   அ) தொடரின் முதலில் ஆ) தொடரின் இடையில்

   இ) தொடரின் இறுதியில் ஈ) தொடரில் இடம்பெறவில்லை

5. 'அவன் **வந்து பார்த்துச்** சென்றான்' – இத்தொடரில், தடித்த எழுத்துகளில் இடம்பெற்றுள்ளவை

   அ) பெயரெச்சங்கள் ஆ) வினைமுற்றுகள்

   இ) முற்றெச்சங்கள் ஈ) வினையெச்சங்கள்

### குறுவினா

1. மொழி ஒப்பாய்வின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.
2. தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பு குறித்துத் தொல்காப்பியம் கூறுவது யாது?
3. தமிழின் தொன்மைச் சிறப்புக்குச் சான்றுகள் இரண்டு தருக.
4. ஆங்கிலம் என்பதன் மூலச்சொல் எது? இஃது எங்கு, யாரால் பேசப்பட்டது?
5. தமிழிலிருந்து ஆங்கிலம் பெற்றுக்கொண்ட சொற்களுள் எவையேனும் நான்கைக் குறிப்பிடுக.
6. தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றின் தொடரமைப்பில் வினைமுற்றுகள் எங்கு இடம்பெறுகின்றன? எடுத்துக்காட்டுகள் தருக.

### சிறுவினா

1. சொல்லமைப்பின் அடிப்படையில், மொழிநிலைகள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன? அவற்றுள் ஏதேனும் ஒன்றை விளக்குக.
2. பெயரடை, வினையடை ஆகியன தமிழ், ஆங்கிலத் தொடரமைப்பில் எவ்வாறு வருகின்றன? சான்றுடன் விளக்குக.
3. 'உருபன்கள்' முன்னொட்டாகவும் பின்னொட்டாகவும் வருவதைத் தமிழ், ஆங்கில மொழிகளுடன் ஒப்பிடுக.
4. தொடரமைப்பில் இயைபு என்பது யாது? எடுத்துக்காட்டுகள் தருக.
5. எழுவாய், பயனிலை இயைபு – தமிழிலும் ஆங்கிலத்திலும் எவ்வாறு அமைந்துள்ளன? ஒப்பிடுக.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 174 04-04-2020 15:04:00

## நெடுவினா

1. திராவிடமொழிகளும் ஆங்கிலமும் தொடரமைப்பில் மாறுபடுவதை எவையேனும் ஐந்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. தமிழ்த் தொடரமைப்பில், ஆங்கில மொழியால் ஏற்படும் தாக்கத்தை எடுத்துக்காட்டி விளக்குக.

## படிப்போம் பயன்படுத்துவோம்

| தமிழ், ஆங்கிலம் இலக்கண ஒப்பீட்டு அட்டவணை | |
|---|---|
| **தமிழ்** | **ஆங்கிலம்** |
| திராவிடமொழிக் குடும்பம் | இந்தோ – ஐரோப்பியமொழிக் குடும்பம் |
| தமிழ், ஓர் ஒலிப்பியல் மொழி. ஒவ்வோர் ஒலியனுக்கும் ஓர் எழுத்து உண்டு எனினும், வல்லின எழுத்துகளுக்கு மட்டும் இடம் வரையறுக்கப்பட்டு ஓர் ஒழுங்குமுறையுடன் அமைந்துள்ளது. | ஆங்கிலமும் ஓர் ஒலிப்பியல் மொழிதான். ஆனால், தமிழ்போன்று குறிப்பிட்ட வரையறையுடைய ஒலிப்பியல் தன்மைகொண்ட மொழியன்று. |
| தமிழில் ஓர் எழுத்தைத் தனியாக ஒலிக்கும்போது, என்ன ஒலி எழுகிறதோ, அதே ஒலிதான் அந்த எழுத்து, சொல்லில் வரும்போதும் ஒலிக்கும். எ.கா. க – கடல். (விதிவிலக்காக மெல்லின எழுத்துடன் வல்லினம் வருமிடங்களில் மட்டும் ஒலிப்பில் மாறுபடும். எ.கா. சங்கம்) | ஆங்கில எழுத்துகளுக்கும் அவற்றின் ஒலிப்புமுறைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. ஓர் எழுத்தைத் தனித்துச் சொல்லும்போது, குறிப்பிட்ட ஓர் ஒலி பெறும். ஆனால், அதே எழுத்து, வெவ்வேறு சொற்களில் இடம்பெறும்போது, வெவ்வேறு ஒலிப்பைப் பெறும். எ.கா. (C) – (சி) CAT , (கேட் ), COW (கௌ), CALM (காம்). |
| ஒட்டுநிலை மொழியமைப்புடையது. | உட்பிணைப்பு மொழியமைப்புடையது. |
| சொல்லின் வினைமுற்று வடிவம் திணை, பால், எண், இடம், காலம் உணர்த்தும். | சொல்லின் வினைமுற்று வடிவம் காலம்தவிர, எதனையும் உணர்த்தாது. |
| எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற அமைப்பில் தொடர் அமைவது வழக்கம். எனினும், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்றும் அமைவதுண்டு. | எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்றே தொடர் அமையும். |
| தமிழில் எழுவாயையும் பயனிலையையும் இணைக்கும் இணைப்பு வினை இல்லை.<br>எ.கா. அவர் ஆசிரியர்<br>(அவர் – எழுவாய், ஆசிரியர் – பெயர்ப்பயனிலை). | ஆங்கிலத்தில் இணைப்பு வினை, கட்டாயம் தேவை. (is, are, was, were, am, be, been என்பன இணைப்புவினைகள் Coupla or Linking Verbs)<br>Example: He is a Teacher. |
| தமிழில், Article இல்லை. எனினும் ஒரு, ஓர், அந்த முதலிய சொற்கள் அதற்கு மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. | Article (a, an, the) பரவலாகப் பயன்படுத்தப் படுகின்றன. |
| பின்னொட்டு அமைப்புடையது. எ.கா.<br>புத்தகம் மேசைமேல் இருக்கிறது. (மேசைக்குப் பின்னால் (மேல்) வருவதால் பின்னொட்டு.) | முன்னொட்டு அமைப்புடையது.<br>Example: The book is on the table.<br>(மேசைக்கு முன்னால் (On) வருவதால், முன்னொட்டு. |
| தமிழில் மற்றும் (and) என்னும் இணைப்புச்சொல் பெரும்பாலும் பயன்படுத்துவதில்லை. | ஆங்கிலத்தில் and என்னும் இணைப்புச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. |
| தொடரில் சொற்களின் வரிசைமுறை நெகிழ்வுடையது. ஆயினும், உரிய பொருளைத் தரும். | தொடரில் சொற்களின் ஒழுங்குமுறை, கட்டாயம் வேண்டும். இல்லையெனில் பொருள் மாற்றம் தரும். |



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 175 04-04-2020 15:04:00

# பொருண்மையும் சொற்பொருள் மாற்றமும்

## அறிமுகம்

மொழியியல் துறையில் ஒலியனியல், உருபனியல், தொடரியல் போன்று பொருண்மையியலும் ஒன்று. பொருண்மையியல் என்பது, சொற்களின் பொருளை விளக்குகின்ற ஓர் இயல். மொழியில் சொற்கள் தனித்து நின்றும், தொடரில் அமைந்தும் பொருளை விளக்குகின்றன. அவ்வாறு வரும் சொற்கள், அனைத்து இடங்களிலும் ஒரே பொருளைத் தருவதில்லை; தனித்துச் சொல்லும்போது ஒரு பொருளும் தொடரில் வரும்போது வேறு பொருளையும் தருகின்றன. சூழலுக்கேற்பவும் சொற்பொருளில் மாற்றம் ஏற்படுகின்றது. ஆகவே, பொருண்மையியலானது, சொற்கள் வெளிப்படுத்தும் வெவ்வேறான பொருள்களைப் பற்றி விளக்குவதாக அமைகின்றது.

## பொருண்மையியல் – விளக்கம்

நாம் பேசும்போது, பல சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால், அச்சொற்கள் உணர்த்தும் பொருளின் தன்மையை உணர்ந்து பயன்படுத்துகிறோமா என்று உணர்வதில்லை. குறிப்பிட்ட ஒரு சொல், ஒவ்வொரு தொடரிலும் வெவ்வேறு பொருள் தருவதனை எப்போதாவது அறிந்திருக்கிறோமா? கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள்.

| தொடர்கள் | உணர்த்தும் பொருள் |
|---|---|
| • 'கை வலிக்கிறது'. | – உடலின் ஓர் உறுப்பு |
| • 'கையூட்டு கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்'. | – உழைப்பின்றி வரும் பணம் |
| • 'தன் கையே தனக்கு உதவி' | – உழைப்பின் மேன்மை |
| • 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' | – அருகில் என்னும் பொருள் |
| • கள்வனைக் கையும்களவுமாகப் பிடித்தனர் | – ஒரு செயலை நேரடியாகப் பார்த்தல் |
| • முருகன், வள்ளியைக் கைபிடித்தான் | – திருமணம் புரிதல் |
| • கண்ணனை ஒரு கை பார்த்துவிடவேண்டும் | – சரியான பாடம் கற்பித்தல் |
| • ஆட்டத்தில் ஒரு கை குறைகிறது | – ஓர் ஆள் (எண்ணிக்கை) தேவை |

படித்தீர்களா? எத்தனை கைகள்? என்னென்ன பொருள் தருகின்றன? மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தொடரிலும் 'கை' என்னும் சொல், ஒவ்வொரு பொருள் தருவதை உணர்ந்திருப்பீர்கள். இதே சொல்லைப் பயன்படுத்தி உங்களாலும் வேறு சில தொடர்களை உருவாக்கமுடியும் அல்லவா!

'கை' என்பதன் அகராதிப் பொருள், மனித உடலின் ஓர் உறுப்பு. 'கை' என்பது, அடிப்படையில் ஒரு பெயர்ச்சொல். இதே சொல், உணர்வுப் பொருளாகவும் பயன்பாட்டுப் பொருளாகவும் சூழலுக்கேற்பப் பொருள்மாறுகின்றது.

ஆகவே, மொழிக்கூறுகள் பெற்றுள்ள பொருண்மைத் தன்மையை அகராதிப்பொருள், இலக்கணப் பொருள், உணர்வுப் பொருள், பயன்பாட்டுப் பொருள், சூழற்பொருள் என வகைப்படுத்திக் கூறலாம்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 176 04-04-2020 15:04:00

## பொருண்மைக் கோட்பாடுகள்

பழந்தமிழ் இலக்கணநூலான தொல்காப்பியம், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று சொல்லின் தன்மையைக் குறிப்பிடுகிறது.

மேலும், "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லி னாகும்" என்றும் கூறுகிறது. ஆகவே, ஒரு சொல், சொல்லாகிய தன்னையும் குறிக்கும்; தான் குறிப்பிடும் வேறு பொருள்களையும் குறிக்கும். அச்சொல், சூழல் அடிப்படையில் பலவகையான பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளக்கி நிற்கும் என்பது, தொல்காப்பியர் உணர்த்தும் பொருண்மைக் கோட்பாடு.

மொழியியல் அறிஞர்கள், பொருண்மையியலைப் பல கோட்பாடுகளால் விளக்குகின்றனர். எடுத்துக்காட்டாகச் சசூர் என்பவர், சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவு இயற்கையானதன்று என்று வலியுறுத்தியுள்ளார். அவர், சொல்லைக் குறிப்பான் எனவும், சொல் குறிப்பிடும் பொருளைக் குறிப்பீடு எனவும் வேறுபடுத்தியுள்ளார்.

ஃபுளும் பீல்டு என்பவர், தூண்டல் செய்கைக்கு எதிர்வினையாக அல்லது துலங்கலாக மொழி வெளிப்படுகிறது எனக் கூறியுள்ளார். மாலினோவ்ஸ்கியும் பிர்த்தும், ஒரு சொல்லின் சூழலை அறிந்துகொள்ளாமல், அச்சொல்லின் பொருளை அறிதல் இயலாது என்று கூறினர்.

இதனடிப்படையில் உணர்வுக் கோட்பாடு, மரபுக்கோட்பாடு, சூழல்கோட்பாடு, பயன்பாட்டுக் கோட்பாடு எனப் பல்வேறு கோட்பாடுகளை மொழியியல் அறிஞர்கள் உருவாக்கினர். இவ்வாறு, பல்வேறு கோட்பாடுகள் இருப்பினும் அவை யாவும் ஒரு சொல்லானது, தனித்துநின்று ஒரு பொருளையும் தொடரில் வரும்போது பல பொருளையும் சூழலுக்கேற்ப உணர்த்தும் என்பதையே எடுத்துக்கூறுகின்றன. இனிச் சூழல்கோட்பாட்டின்வழிப் பொருள்கொள்ளும் முறைகுறித்துக் காண்போம்.

## சூழல் கோட்பாடு – ( Contextual Theory)

ஒரு மொழியிலுள்ள சொற்கள், தொடர்கள் ஆகியன சமுதாயச் சூழல்களைத் தழுவியே பொருண்மைகளை உணர்த்துகின்றன. சூழல்கோட்பாடு என்பது, ஒலிச் சூழல், உருபன் இணைப்புச் சூழல், இலக்கணச் சூழல், சொல் இணைப்புச் சூழல், பேச்சுச் சூழல் என ஐவகைப்படும். அவற்றை எடுத்துக்காட்டுகள்வழிக் காண்போம்.

### அ) ஒலிச் சூழல்

பலகை – பல கை

பலகை என்னும் சொல், ஒரு சொல்லாகத் தனித்து ஒலிக்கும்போது, மரப்பலகை என்னும் பொருளையும், பல சொல்லாகத் தொடர்ந்து ஒலிக்கும்போது, பல கைகள் என்னும் பொருளையும் தருகின்றது. இவ்வாறு வரும் சொற்களைப் பொதுமொழி எனப் படித்திருப்பீர்கள்.

### ஆ) உருபன் இணைப்புச் சூழல்

ஆறு – ஆற்றை (ஆறு + ற்+ ஐ)

ஆறை (ஆறு+ஐ)

ஆறு என்னும் சொல்லுடன் ஐ என்னும் உருபன் சேரும்போது, சூழலுக்கேற்பப் பொருள் மாற்றம் பெறுகிறது. ஆறு + கடந்தான் எனக் கூறும்போது, ஐ உருபனுடன் ஒற்று இரட்டித்து, ஆற்றைக் கடந்தான் எனவும், ஐந்துடன் ஆறு என்ற எண்ணைக் கூட்டு என வரும்போது, ஐ உருபன் மட்டுமே இணைந்து ஆறைக் கூட்டு எனவும் பொருள் தருகிறது.

### இ) இலக்கணச் சூழல்

ஆடு – ஆடு

ஆடு என்னும் சொல், பெயர்ச்சொல்லாகவும் வரும். வினைச்சொல்லாகவும் வரும். வயலில் ஆடு மேய்கிறது எனச் சொல்லும்போது, ஆடு என்பது, ஒரு விலங்கின் பெயரைக் குறிக்கும் பெயர்ச்சொல். இசைக்கேற்ப நடனம் ஆடு எனச் சொல்லும்போது, ஆடு என்பது ஆடுதல் என்னும் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 177 04-04-2020 15:04:00

## ஈ) சொல் இணைப்புச் சூழல்

சவுக்கு – சவுக்கு மரம் – சவுக்கடி

சவுக்கு என்னும் சொல்லுடன் வெவ்வேறு சொற்கள் இணையும்போது, வெவ்வேறு பொருளைத் தருகின்றன. சவுக்குமரம் என்று கூறும்போது, ஒரு வகை மரத்தைக் குறிப்பிடுகிறது. சவுக்கடி கிடைத்தது என்று கூறும்போது, சவுக்கால் அடித்ததைக் குறிப்பிடுகிறது.

## உ) பேச்சுச் சூழல்

இது, பொருள் மயக்கம் கொண்ட மொழிக்கூறுகளைச் சார்ந்தது. அதனால், அதனதன் பொருள்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பொருள் உணரவேண்டும். இதனைப் பேச்சுநடை, வட்டாரவழக்கு, கதைநடை, கவிதைநடை போன்ற பல்வேறு மொழிக்கூறுகளில் உணரலாம்.

எடுத்துக்காட்டாக,

நான் மதுரை

என்னும் தொடர் பொருள் தெளிவில்லாமல்,

1. நான் மதுரையைச் சார்ந்தவன்
2. நான் மதுரைக்குப் போகிறவன்
3. நான் மதுரையிலிருந்து வருபவன்

எனப் பல பொருள்களைத் தரக்கூடிய வகையில் உள்ளது. இப் பொருள் மயக்கங்கள் பேச்சுச் சூழலினால் தெளிவுபடும். அதாவது நடத்துநரிடம், பயணி தான் போகவேண்டிய இடத்தைக் குறிப்பிடும்போதும், தான் எங்கிருந்து வருகிறேன் என்பதைக் குறிப்பிடும்போதும், தன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவரிடம் தன் சொந்த ஊர் இன்னதென்பதைச் சுட்டிக்காட்டவும் எனப் பல நிலைகளில் "நான் மதுரை" என்னும் தொடர் பயன்படுகிறது.

இவ்வாறு பொருண்மை சுட்டல், வெளிப்படையாகவும்அமையலாம்.குறிப்பாகவும் அமையலாம். குறிப்பாக அமையும்போது, அது சொற்பொருள் மாற்றத்திற்கு வழிவகை செய்கிறது.

## சொற்பொருள் மாற்றம்

பொருளை உணர்த்துவதற்குச் சொற்கள் கருவிகளாக உள்ளன. அவை, பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்துகின்றன. அனைவருக்கும் தெரிந்த சொற்களால் அறியப்படும் பொருள்கள் வெளிப்படையாக உணரப்படுவன. சூழ்நிலை அறிந்து நுட்பமாக அறியப்படும் பொருள்கள் குறிப்பாக உணரப்படுவன. ஆகுபெயர், அன்மொழித்தொகை, சிலேடை, உருவகம், குழூஉக்குறி, மங்கலம், இடக்கரடக்கல் முதலியவை குறிப்பால் பொருள் உணர்த்துகின்றன என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சொற்பொருள் மாற்றத்திற்குப் புறஉலகு, அதன் நிகழ்வுகள், சமுதாயம், பண்பாடு, பேசுபவரின் உணர்வு, மனநிலை, பேச்சுச்சூழல் முதலிய பல காரணங்கள் உள்ளன. இவற்றோடு பிறமொழிகளின் தாக்கங்களும் காரணங்களாக அமைகின்றன. இவற்றின் அடிப்படையிலேயே மொழியில் பயன்படுத்தப்படும் சொற்கள், தொடர்கள் ஆகியவற்றின் பொருளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இனி, சொற்பொருள் எவ்வாறெல்லாம் மாற்றம் பெற்றுள்ளது என்பதைப் பின்வரும் தலைப்புகளில் காண்போம்.

## ஒரு சொல்லுக்கு ஒரு பொருள்

பேச்சுமொழியில் ஒரு சொல், ஒரு பொருளை உணர்த்தும். சிலபோது, வேறொரு பொருளையும் உணர்த்தும். அவ்வாறு உணர்த்தும்போது, ஒரு பொருள் நிலைபெற்றும் மற்றொரு பொருள் வழக்கிழந்தும் போகலாம்.

எடுத்துக்காட்டாகக் 'கவலை' என்னும் சொல்லுக்கு இரண்டாகப் பிரியும் இடம் என ஒரு பொருளும் மனவருத்தம் என மற்றொரு பொருளும் உள்ளன. இப்போது, 'கவலை' என்பது, மனவருத்தம் என்ற ஒரு பொருளை மட்டுமே குறிக்கிறது.

நீங்களும் இத்தகைய சொற்களைத் தொகுத்துப் பட்டியல் உருவாக்கலாம்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 178 04-04-2020 15:04:00

## ஒரு பொருளுக்கு ஒரு சொல்

ஒரு பொருளை உணர்த்த, ஒரு சொல்லே போதுமானது. அவ்வாறின்றி ஒரு பொருளைக் குறிக்க, இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட சொற்கள் இருக்குமானால், ஒன்று நிலைபெற மற்றவை வழக்கிழக்கும். எடுத்துக்காட்டாக, 'வீடு', 'இல்', 'மனை' போன்ற சொற்கள் 'இல்லம்' (வீடு) என்னும் ஒரே பொருளைக் குறித்தன. இப்போதைய வழக்கில் 'இல்' என்னும் சொல்லை, இலக்கியத்தில் மட்டுமே காணமுடிகிறது. 'மனை' என்னும் சொல்லோ, 'வீடு கட்டுவதற்குரிய இடம்' என்னும் பொருளைத் தருகிறது. பேச்சுவழக்கில், ஒருவர் 'நான் மனை வாங்கியுள்ளேன்' என்று கூறினால், அவர் வீடு வாங்கியுள்ளதாகப் பொருளன்று, வீடு கட்ட இடம் வாங்கியுள்ளார் என்பதையே உணர்த்துகிறது.

## உயர்பொருட்பேறு

இழிந்த பொருளில் வழங்கி வந்த சொற்கள், காலப்போக்கில் உயர்ந்த பொருள்களைத் தருவதாகவும் மாற்றமடைந்துள்ளன. இவ்வாறு வருவனவற்றை 'உயர்பொருட்பேறு' எனக் குறிப்பிடுகின்றனர். முன்பு, கள்ளுண்டு களித்தல் என்பதைக் 'களிப்பு' என்றனர். இன்று, 'களிப்பு' என்பது, 'மனமகிழ்ச்சி' என்னும் உயர்பொருளில் வழங்குகிறது. மேலும் ஓர் எடுத்துக்காட்டு, 'பிள்ளை' என்னும் சொல், முன்பு அணிற்பிள்ளையைக் குறித்துப் பின்னர், மக்களின் குழந்தைகளைக் குறித்து, அதன்பின் மகனையும் மகளையும் உணர்த்தத் தொடங்கிவிட்டது.

## இழிபொருட்பேறு

முன்பு, உயர்ந்த பொருளில் வழங்கிவந்த சொல், காலப்போக்கில் இழிந்த பொருளைத் தருவதும் உண்டு. அவ்வாறு வருவனவற்றை 'இழிபொருட்பேறு' எனக் குறிப்பிடுகின்றனர். எடுத்துக்காட்டாக, 'நாற்றம்' என்னும் சொல், முன்பு 'நறுமணம்' என்னும் பொருளைத் தந்தது. இப்போது, 'துர்நாற்றம்' (விரும்பத்தகாத வாசனை) என்னும் இழிந்த பொருளைத் தருகிறது. முன்னர், பொருள்கள் குவியலாகக் குவித்து வைத்திருப்பதனைக் 'குப்பை' என்றனர். இப்போதோ உதவாத, தேவையற்ற பொருள்கள் குவிந்திருப்பதனைக் 'குப்பை' என்கின்றனர்.

## சிறப்புப் பொருட்பேறு

பழந்தமிழில், 'பொன்' என்னும் சொல் செம்பு, தங்கம், வெள்ளி, இரும்பு போன்றவற்றைக் குறிப்பதற்குப் பொதுவான பெயராக வழங்கியது. செம்பொன், வெண்பொன், கரும்பொன் என்றே வழக்கில் இருந்தன. இப்போது, தங்கத்தை மட்டுமே குறிக்கிறது. ஆகவே, முன்னர்ப் பலவற்றிற்கும் பொதுவாக வழங்கிய சொற்கள், அவற்றுள் ஒன்றை மட்டுமே குறிப்பதாக வருவனவற்றைச் சிறப்புப் பொருட்பேறு என்கிறோம். மேலும், சில எடுத்துக்காட்டுகள். எள்ளின் நெய், பாலின் நெய் என்பனவற்றைக் குறித்த 'நெய்' என்னும் சொல், இப்போது, பாலின் நெய்யை மட்டும் குறிக்கிறது. விலங்குகளைப் பொதுவாகக் குறித்த 'மான்' என்னும் சொல் இப்போது, மான் என்னும் ஒரு விலங்கினத்தை மட்டுமே குறிக்கிறது. பழைமையானவற்றை எல்லாம் குறித்த 'பழைமை' என்னும் சொல், இப்போது, பழைய சோற்றை மட்டும் குறிக்கிறது.

## பொதுப்பொருட்பேறு

முன்பு, ஒருவகைப் பெயருக்கு வழங்கிவந்த பெயர், பின்னர் அதனைப்போன்ற பலவற்றிற்கும் பொதுப்பெயராக வழங்குவதைப் பொதுப்பொருட்பேறு என்கிறோம்.

எடுத்துக்காட்டாக, மரத்தினால் செய்யப்பட்ட முகத்தல் அளவையை 'மரக்கால்' எனக் கூறினர். இன்று இரும்பு போன்ற பொருள்களால் செய்யப்பட்டவற்றையும் மரக்கால் என்றே கூறுகின்றனர்.

மேலும், எள்ளினின்று எடுக்கப்பட்டதனை, 'எண்ணெய்' என்றனர். இன்றோ தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய், விளக்கெண்ணெய் எனப் பொதுப்பெயராக வழங்குகின்றனர். தண்மை (குளிர்ச்சி) பொருந்திய நீரே 'தண்ணீர்' எனப்பட்டது. இப்போது கஞ்சித்தண்ணீர், சீரகத்தண்ணீர், மிளகுத்தண்ணீர், காப்பித்தண்ணீர் (Coffee) எனப் பொதுவாகக் கூறுகின்றனர். இவை போன்ற சொற்களையும் உங்களால் தொகுக்கமுடியும் அல்லவா!

## தகுதி வழக்கில் இடம்பெறும் சொற்பொருள் மாற்றம்

இலக்கணப்பகுதியில் தகுதி, இயல்பு என இரு வழக்குகளைப் படித்திருப்பீர்கள். அவற்றுள் தகுதி வழக்கில் இடம்பெற்றுள்ள இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்பன சொற்பொருள் மாற்றம் பெறுகின்றன.

### இடக்கரடக்கல்

பலர் நிறைந்த அவையினிலே சொல்லக்கூடாத சொற்களை மறைத்து, வேறு சொற்களால் கூறுவதே இடக்கரடக்கல். சொல்லக்கூடாத சொற்கள் என்பதனை நாகரிகமற்ற சொற்கள் என்றும் கூறுவர். தொல்காப்பியம், இவ்வகைச் சொல்லை 'அவையல் கிளவி' என்று கூறுகிறது. எடுத்துக்காட்டாகக் கண்கழீஇ வருதும், கால்கழீஇ வருதும் போன்ற தொடர்களைக் கூறலாம். பண்பாட்டின் தாக்கத்தால் இவ்வாறு மாற்றம் ஏற்படுகிறது.

### மங்கலம்

மங்கலம் அல்லாதவற்றைக் கூறும்போது, மங்கலமான வேறு சொற்களால் கூறுவதனை 'மங்கலம்' என்பர். அவ்வாறு கூறுவதனால், பொருள் வேறுபடவும் வாய்ப்புண்டு. இறந்தவரைத் 'துஞ்சினார்', 'விண்ணுலகம் எய்தினார்', இறைவனடி சேர்ந்தார் எனவும் கூறுவர். (துஞ்சுதல் என்பது, தூங்குதல் என்னும் பொருளையும் குறிக்கும்) மேலும், சில எடுத்துக்காட்டுகள்: 'விளக்கை அணை' எனக் கூறாமல், 'விளக்கைக் குளிரவை' எனக் கூறுதல். சுடுகாடு, இடுகாடு எனக் கூறாமல், 'நன்காடு' எனக் கூறுதல். கடுமையான விடம் உடைய பாம்பை 'நல்ல பாம்பு' எனக் கூறுதல்.

**அறிவோம் தெளிவோம்**

**கோட்டை விடுதல்:** மன்னர் ஆட்சிக்காலத்தில் அரசர்களிடையே நடக்கும் போர்களில் பெருந்தோல்வி என்பது, தாங்கள் குடியிருக்கும் கோட்டையினை இழப்பதே ஆகும். இதனைத்தான் கோட்டை விடுதல் என்றனர். இன்று, அச்சொல்லினைப் பெருந்தோல்விக்குரியதாகப் பயன்படுத்துகிறோம்.

### குழூஉக்குறி

ஒரு குழுவுக்குள் ஏதேனும் ஒரு காரணம் பற்றி, அக்குழுவினருக்கு மட்டும் புரியும் வகையில், பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துவதனைக் குழூஉக்குறி என்பர். குழூஉக்குறி என்பது, குறுமொழியாகும். பொற்கொல்லர், பொன்னைப் 'பறி' எனக் கூறுவதும், வேடர் கள்ளைச் 'சொல் விளம்பி' எனக் கூறுவதும் குழூஉக்குறிக்கு எடுத்துக்காட்டுகளாகும். இளம்தலைமுறையினரிடம் இச்சொல் வழக்கு, இப்போது பெருவழக்காக உள்ளது. அவர்கள், தத்தமது குழுவினருக்குப் புரியும்வகையில், பழைய சொற்களை விட்டுவிட்டுப் புதிய சொற்களால்கூறுவதை,மொழிவிளையாட்டாகக் கருதுகின்றனர்.

### ஆகுபெயரில் சொற்பொருள் மாற்றம்

ஒரு பொருளின் பெயர், அதனொடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு ஆகிவருவது, 'ஆகுபெயர்' எனப் படித்திருக்கிறீர்கள். பதினாறு வகை ஆகுபெயர்களும் சொற்பொருள் மாற்றத்திற்கு உட்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஊர் சிரித்தது என்னும் இடவாகுபெயர், ஊரைக் குறிக்காமல், ஊரில் வாழும் மக்களைக் குறிக்கிறது.

### சொற்பொருள் மாற்றத்தால் ஏற்படும் பயன்கள்

சொற்பொருள் மாற்றம் பற்றிய ஆய்வு, தமிழில் சொற்களின் நிலை, பொருண்மை அடிப்படையில் அவை எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என அறிந்துகொள்ள வழிவகுக்கும். பலவகைப்பட்ட அகராதிகளை உருவாக்குவதற்குத் துணைபுரியும். ஒருபொருள் பன்மொழி அகராதிகளில் சொற்களைப் பகுக்க உதவும். ஆக்கமுறை மாற்றிலக்கணத்திற்கு அகராதி உருவாக்கவும் பயன்படும். மொழிபெயர்ப்புக்கான அடிப்படைக் கூறுகளை அறிந்துகொள்ள வகைசெய்யும். தொடரியல் பண்புக் கூறுகளைப் பெறுவதற்கு வாய்ப்புள்ளதால், இவ்ஆய்வு தொடரியல் செயல்பாட்டை அறிந்துகொள்ளவும் வழிசெய்யும்.

## கண்ணாடி

**கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. சொற்கள் பொருளுணர்த்தும் தன்மை குறித்து ஆராய்வது -----------.

   அ) தொடரியல் ஆ) உருபனியல்

   இ) பொருண்மையியல் ஈ) ஒலியனியல்

2. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணைக்குரிய விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   அ) வைகை - வை கை 1) உருபன் இணைப்புச் சூழல்

   ஆ) நூலைப்படி - ஏணிப்படி 2) இலக்கணச் சூழல்

   இ) (ஆடு + ஐ) ஆட்டை - ஆடை 3) சொல் இணைப்புச் சூழல்

   ஈ) மலைக்குகை – மலைவாழை 4) ஒலிச்சூழல்

   அ) (அ – 1) ஆ) (ஆ – 2) இ) (இ – 3) ஈ) (ஈ – 4)

3. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – 1. மொழியில் சொற்கள் தனித்தும் தொடரில் அமைந்தும் பொருளை விளக்குகின்றன.

   கூற்று – 2. தனியாகவும் தொடரிலும் வரும் சொற்கள், எல்லா இடங்களிலும் ஒரே பொருளைத் தருகின்றன.

   அ) கூற்று 1, 2 சரியானவை ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

   இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி ஈ ) கூற்று 1, 2, தவறானவை

4. தூண்டல் செய்கைக்குத் துலங்கலாக மொழி வெளிப்படுகிறது என்று கூறிய மொழியியல் அறிஞர்-----------.

   அ) சசூர் ஆ) ஃபுளூம்பீல்டு இ) மாலினோவ்ஸ்கி ஈ) பிர்த்

**குறுவினா**

1. 'கட்டு' என்னும் சொல்லைப் பயன்படுத்தித் தொடர்கள் இரண்டு உருவாக்குக. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருள் தருமாறு எழுதுக.
2. சொற்கள், அகராதிப் பொருளிலும் இலக்கணப்பொருளிலும் வருவதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
3. சூழல் கோட்பாடு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடும் பொருண்மைக் கோட்பாடுகள் யாவை?
5. ஒலிச் சூழல் அடிப்படையில் சொற்கள் எவ்வாறு பொருள் உணர்த்துகின்றன?
6. சொற்பொருள் மாற்றத்திற்கு அடிப்படையாக அமையும் காரணிகள் யாவை?



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 181 04-04-2020 15:04:00

7. 'குழலினிது ...' எனத் தொடங்கும் குறளில், 'மக்கள்' என்னும் சொல், என்ன பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளது? இப்போது என்ன பொருளில் கூறப்படுகிறது?

8. தொல்காப்பியம் 'அவையல் கிளவி' என்று எதனைக் குறிப்பிடுகிறது? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

9. 'விளக்கைக் குளிரவை' எனக் கூறுவது எதன்பாற் படும்? ஏன்?

10. ஆகுபெயரில் ஏற்படும் சொற்பொருள் மாற்றத்திற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

## சிறுவினா

1. பொருண்மையியல் – வரையறுக்க.
2. தொல்காப்பியர் குறிப்பிடும் பொருண்மைக் கோட்பாடு யாது?
3. சூழல் கோட்பாட்டை எவையேனும் இரண்டு சூழல்வழி எடுத்துக்காட்டுகளுடன் பொருத்திக்காட்டுக.
4. சொற்பொருள் மாற்றத்தில் 'உயர்பொருட்பேறு' என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
5. அன்றும் இன்றும் வழக்கத்திலுள்ள சொற்கள், பொருள் மாற்றம் அடைந்திருப்பதை எடுத்துக்காட்டுகளுடன் ஒப்பிடுக.
6. 'நெடுநல்வாடை' , 'வாடை அடிக்கிறது' இவ்விரு தொடரிலும் 'வாடை' என்னும் சொல்லின் பொருள் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது? விளக்குக.

## நெடுவினா

1. சூழல் கோட்பாட்டின் அடிப்படையில் சொற்கள் எவ்வாறு பொருண்மையை உணர்த்துகின்றன? எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
2. தகுதிவழக்கில் ஏற்படும் சொற்பொருள் மாற்றம் குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. சொற்பொருள் மாற்றத்தால் ஏற்படும் பயன்கள் யாவை?

### அறிவோம் தெளிவோம்

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்ற மூன்றையும் இலக்கண எல்லையில் அவை பொருந்தாவிட்டாலும் அவற்றின் பயன்கருதி, வழக்கிலுள்ள சொற்களாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நன்னூல் குறிப்பிடுகிறது. இம்மூன்றனுள் 'மங்கலம்' என்னும் வழக்குச்சொல்லை நோக்குவோம். நல்லதை வாயால் சொல்வார்களேயன்றிக் கெட்டதைத் தமிழர்கள் வாயால் சொல்லமாட்டார்கள். கெட்டவர்களைக்கூடக் 'கெட்டவர்' என்னாது, 'அவர் யாரோ' எனக் கூறுவது, தமிழர் பண்பாடு. 'கொல்லா விரதமெனக் கொண்டவரே நல்லோர் மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே' என்று தாயுமானவர் தம் பராபரக்கண்ணியில் குறிப்பிடுவது 'மங்கலம்' என்னும் வழக்குக்கருதிதான் எனலாம்.

இவைபோன்ற இலக்கண அமைதிகள் தமிழில் காலமும் இடமும் கருதி, தமிழர்தம் பண்பும் நாகரிகமும் கெடாதவகையில் பயன்படுகின்றன.

–

– நல்ல தமிழ், அ. மு. பரமசிவானந்தம்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 182 04-04-2020 15:04:00

# வேர்ச்சொல் ஆய்வு – ஓர் அறிமுகம்

## அறிமுகம்

உலகில், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் உள்ளன. இம்மொழிகளின் வரலாற்றினை, மொழியாய்வு அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். மொழியாராய்ச்சியில் வேர்ச்சொல் ஆய்வு, முதன்மையாக விளங்குகிறது. உலக மொழிகளில் முதன்மையான மொழிகளை, மொழியறிஞர்கள் செம்மொழிகள் என்பர். தமிழ், அச்செம்மொழி வரிசையில் இடம்பெற்றுள்ளது.

மக்கள் வழக்கிலுள்ள பெரும்பாலான மொழிகளுக்கு, அகராதிகள் உருவாக்கப் பட்டுள்ளன. இலக்கிய வழக்கும் செல்வாக்கும் மிக்க மொழிகளுக்கு, அகராதிகள் மட்டுமன்றி வேர்ச்சொல் அகராதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## வேர்ச்சொல் ஆய்வு – முன்னுரை

வேர்ச்சொல் ஆய்வு என்னும் இத்தலைப்பு, வேர்ச்சொல் ஆய்வு என்றால் என்ன என்பது பற்றியும் தமிழில் வேர்ச்சொல் ஆய்வு எவ்வாறு தோற்றம் பெற்றது என்பது பற்றியும் முதலில் விளக்குகிறது; அதனைத் தொடர்ந்து, தமிழ் - திராவிடமொழிகள் வேர்ச்சொல் உறவினையும் தமிழ் - இந்தோ ஐரோப்பிய மொழிகள் வேர்ச்சொல் உறவினையும், வேர்ச்சொற் கோட்பாட்டையும் விளக்குகிறது.

**அறிவோம் தெளிவோம்**

விள்ளல், விண்டல், விழைதல் ஆகிய சொற்களின் அடிப்பகுதி 'விள்' என்பது. 'விள்' என்ற அடிச்சொல்லிற்கு 'விருப்பம்' என்பது பொருள். 'விள்' என்னும் அடிப்பகுதிதான் வங்கம் – பங்கம்; வண்டி – பண்டி; வெற்றிலை – Betel போல் 'வகர பகர' மாற்றத்தில் மேலை இந்தோ – ஐரோப்பிய மொழிகளில் விள் – Phil எனத் திரிந்தது. 'விருப்ப ஆய்வு' என்பதன் வழியாகவே, 'வேர்ச்சொல் ஆய்வு' 'Philology' ஆனது என்பார் பாவாணர்.

## அகராதி – வேர்ச்சொல் அகராதி

அகராதிகளில், சொற்களுக்குரிய சரியான வடிவங்களும் பொருள்களும் தரப்பட்டிருக்கும். வேர்ச்சொல் அகராதிகளில் இவற்றிற்கு அப்பால், மொழியின் சொற்கள் தோன்றி வளர்ந்த வரலாறு விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும். இதனால், ஒரு மொழியை நுட்பமாக அறிவதற்கு இயல்பான அகராதியைவிட, வேர்ச்சொல் அகராதி துணை புரியும்.

ஆங்கிலத்தில், வேர்ச்சொல் ஆய்வினை Etymological Studies என்பர். 'Etyma' என்ற சொல்லிற்கு உண்மைப்பொருள் (Real meaning) என்பது பொருள். மேற்குலகத்தில் வேர்ச்சொல் ஆய்வினை, 'Philology' என்று கூறினர். Philology என்பதற்கு 'விருப்பமான ஆய்வு' என்பது பொருள். சொல்லாய்வு ஒரு விருப்பமான கலையாக இருந்ததை இதன்வழி நாம் அறிகிறோம்.

## அகராதியும் வேர்ச்சொல் அகராதியும்

'உவரி' என்னும் ஒரு தமிழ்ச்சொல்லினை, அகராதியும் வேர்ச்சொல் அகராதியும் இருவேறு வகையில் விளக்கப்படுத்தும்.

உவரி = உப்பு, கடல். இவ்விளக்கத்தினை அகராதியில் காணலாம். ஆயின், வேர்ச்சொல் அகராதி 'உவர்' என்னும் உப்பினைக்கொண்டிருப்பதால் கடல், 'உவரி' எனப்பட்டது.

'உ' என்னும் உயர்வுப்பொருள் சுட்டடியாக உ - உக – உகர்ப்பு – உவர் – உவரி என இச்சொல் பிறந்தது. மகன் – மவன் போல் ககரம் வகரமாகி, 'உகர்', 'உவர்' ஆனது.

'உகப்பே உயர்வு' என்பது, தொல்காப்பியம். இவ்வாறெல்லாம் வேர்ச்சொல் அகராதியில் விளக்கம் விரியும்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 183
04-04-2020 15:04:00

கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி, அந்நீரைக் கதிரவன் வெப்பத்தால் வறளச் செய்து, உருவாக்குவதே உப்பாகும். கடல்நீர் காய்ந்ததும் கடல்நீரிலிருந்த ஒரு வெண்பொருள் உப்பிக்கொண்டு, நிலத்தின் மேல் எழும். இதனால், இவ்வெண்பொருள் 'உப்பு' என்னும் பெயர் பெற்றது ஒப்புநோக்கத்தக்கது. மேல் எழுதல் என்னும் பொருளில் உருவான 'உவர்' என்னும் இச்சொல், உவரி என உப்பினையும் கடலையும் குறித்ததற்கு அப்பால் மிகுதியானது என்ற பொருளிலும் பிறகு பொருள் நீண்டது. மிகுதியானது என்ற உவரியே பிறகு, உபரி எனப் பேச்சுவழக்கில் திரிந்தது. இவ்வாறான கூடுதல் விளக்கங்களையும் வேர்ச்சொல் அகராதி கொண்டிருக்கும்.

இயல்பான அகராதியைவிட வேர்ச்சொல் அகராதி, ஒரு மொழியைப்பற்றி அறிவதற்குக் கூடுதல் விளக்கம் தந்து உதவுகிறது. இதனை 'உவரி' சொல்லிற்குக் காட்டிய விளக்கத்தின்வழி அறிந்தோம்.

## வேர் என்பதன் விளக்கம்

தொல்காப்பியர், 'வியலென் கிளவி அகலப் பொருட்டே' என ஒரு நூற்பா செய்தார். இந்நூற்பாவின்வழி 'வியல்' சொல், அகலப் பொருள் உடையது என்பதை அறிகிறோம். அகன்ற, பெரிய உலகம் – வியனுலகம் என்றெல்லாம் அழைக்கப்படும் பழந்தமிழ் மரபில் இவ் உண்மையைக் காணலாம்.

நிலத்திற்கு அடியில் மரம், செடி, கொடிகளைத் தாங்கி நிற்கும் ஓர் உறுப்பு, வேர். நிலத்தில் ஊன்றும்போது, சிறிதாக இருந்த இவ் உறுப்பு மெல்ல மெல்ல வியலித்து வளர்கிறது. அதன் அடிப்படையிலேயே வியல் – வியர் – வேர் என இச்சொல் உருவானது. பெயர் – பேர் என்பதுபோல், வியர் – வேர் ஆனது.

மரம், செடி, கொடிகளைத் தாங்கி, வியலித்து வளர்ந்து நிற்கின்ற நிலைத்திணை (தாவரங்கள்) களின் வேர்கள்போலவே, மொழியின் சொற்கள் பலவற்றையும் தாங்கி நிற்கின்ற மூலச்சொற்களை நாம் வேர்ச்சொற்கள் என்கிறோம். ஆங்கிலத்திலும் இவ்விரண்டின் வேரினையும் *Root* என்ற ஒரு சொல்லால் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

### அறிவோம் தெளிவோம்

**உவர் – Over**

உப்பி மேலெழுந்தது உப்பு. உகப்பி மேலெழுந்தது உக – உகர் – உவர். இவ் 'உவர்' மேலெழுதல் பொருளிலும் கூடுதல் பொருளிலும் இந்தோ ஐரோப்பியத்தில் உபர் – உபரியானது. கீழை இந்தோ ஐரோப்பியமாகிய சமற்கிருதத்தின் உபரியே மேலை இந்தோ ஐரோப்பிய மொழிகளில், Over என்பதற்கு வேர் என்பார் ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று. (The Concise Dictionary of ENGLISH ETYMOLOGY – Walter W. Skeat)

## தமிழில் வேர்ச்சொல் ஆய்வின் தோற்றம்

தமிழின் முழுமுதல் இலக்கணநூல், தொல்காப்பியம். இந்நூலில், வேர்ச்சொல் ஆய்வுக்கான பல தரவுகள் உள்ளன. தொல்காப்பிய உரியியல் பகுதிகள் பலவும் இச்செய்திகள் கொண்டவை.

'அமர்தல் மேவல்' என்பது, ஓர் உரியியல் நூற்பா. அமர்தல் என்னும் சொல்லிற்குப் பொருந்துதல் என்பது பொருள். அமர்தல் சொல்லின் அடிப்பகுதி, 'அம்' என்பதாகும். இதன் அடிப்படையிலேயே ஒன்றோடொன்று பொருந்தி வளரும் மூங்கில் அம் – அமை எனப்பட்டது. 'ஆடமை புரையும் வனப்பில் பணைத்தோள்' என்ற குறுந்தொகைப் (131) பாடலில் ஆடுகின்ற மூங்கில், (ஆடு + அமை ) ஆடமை எனப்பட்டது.

சோற்றுஉருண்டையைக் குறிக்கும் ஒரு தமிழ்ச்சொல், 'அமலை'. இச்சொல்லும் அம் – அமல் – அமலை எனப் பல சோற்றுப் பருக்கைகள் பொருந்தியதால் தோன்றிய பெயரேயாகும். இரு நாட்டுப் படைவீரர்கள் திரண்டு நின்று போர் செய்தலை 'அமர்' எனவும், போர் நிகழும் இடம் – அமர்க்களம் எனவும் அழைக்கப்படும். இங்கு வந்த 'அமர்' சொல்லும்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 184 04-04-2020 15:04:00

'அம்' என்னும் கூட்டப்பொருள் வேரிலிருந்து உருவானவையே. புளி, மிளகாய் போன்ற பொருள்களை வைத்து, நெருக்கி அரைக்கும் கல், அம்மிக்கல். இவ்வாறெல்லாம் 'அம்' ஆகிய பொருந்துதற் பொருள் வேர், பொருந்தற் பொருளில் இணைந்திருப்பதைத் தேவநேயப் பாவாணர் நிரல்பட விளக்குவார்.

## தமிழும் திராவிட மொழிகளும்

தமிழையும் தமிழுடன் மிக நெருக்கமான உறவுடைய தென்னக மொழிகளையும் முதற்கண் இணைத்து ஆய்வு செய்தவர், கால்டுவெல். தென்னக மொழிகளில் தமிழே மூத்தது, முதன்மையானது என்பதைக் கால்டுவெல் நிறுவினார். பாவாணர், தமிழைத் 'திரவிடத் தாய்' என்றே குறித்துத் தனிநூலும் எழுதினார். தமிழுக்கு மிக நெருக்கமான திராவிட மொழிகளின் வரலாற்றையும் அவற்றின் சொற்களையும் மூலமொழியாகிய தமிழுடன் உறவுபடுத்தி ஆய்வதனால் மட்டுமே நல்விளக்கம் பெறமுடியும்.

## சேரல் – கேரல் – கேரலன் – கேரளன்

சங்க இலக்கியத்தில் மலைநாடு, 'சாரல்நாடு' எனச் சொல்லப்படுகிறது. சாரல் என்னும் இச்சொல், 'சேரல்' எனத் திரிந்து, மலைநாட்டு அரசர்களைக் குறித்துள்ளது. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல், குடக்கோ இளஞ்சேரல் போலச் சங்க காலத்திலேயே அரசர்கள் பெயரில் இச்சொல் வழக்கு பெற்றுள்ளது. சேரல் என்னும் இச்சொல், பிறகு 'சேரலன்' எனத் திரிந்தது. சீர்த்தி - கீர்த்தி; செம்பு – கெம்பு போல் சகர, ககர மாற்றத்தில் 'சேரலன்' பிறகு, 'கேரலன்' ஆனது. மங்கலம் – மங்களம்; மெல்ல – மெள்ள போல ல – ள போலிமரபில் கேரலம் – கேரளம் ஆனது. இக் கேரளம் சொல்லே இன்று 'கேரளா' (KERALA) எனப்படுகிறது.

புழை என்பது, 'துளையை'க் குறிக்கும் தமிழ்ச்சொல். நீர் ஓடும் துளையுள்ள இடமே புழைக்கடை. பேச்சுவழக்கில், இப் புழைக்கடை, புழக்கடை எனப்படும். உள்துளையுடைய காய், 'புழல்காய்'. அதுவே, பிறகு 'புடல்காய்' ஆனது. நாழி + உரி = நாடுரி எனத் திரியுமென்பார் தொல்காப்பியர். ழகரம் – டகரமாகத் திரிந்த அதே போக்கில்தான் புழல்காய், தமிழில் புடல்காய் ஆனது. இப் புடல்காய், புடலங்காய் – பொடலங்காய் - பொள்ளங்காய் எனவும் மக்கள் வழக்கில் பல திரிபுகளில் வழங்குகிறது.

'புல்' என்னும் ஒரு வேர்ச்சொல்லுக்குத் துளை என்பது பொருள். தொல்காப்பியர், நிலைத்திணைகளைப் புல், மரம் என இரண்டாகப் பிரித்தார். உள்துளை நிலைத்திணைகளே புல்வகை என்றானது. இப் 'புல்' சொல், புல் + து = புற்று எனவும், புல் – பொல் – பொல் + து – பொற்று – பொற்றல் – பொத்தல் எனவும் புல் – புள் – புளு – புளுகு எனவும் புல் – புள் – புளு – புழு – புழை எனவும் எல்லாம் பலப்பல துளை என்னும் பொருள்தரும் சொற்களை அதன்போக்கில் ஈன்றுள்ளது. மலையாளமொழி, புடல் – புடலை – புடலங்காய் என்னும் தமிழ் வழக்கினைப் 'படோல்'எனக் கூறுகிறது.

மலையாளத்தில் மட்டுமல்லாமல், பிற திராவிடமொழிகளிலுள்ள சொற்களுக்கும் உரிய முழுப்பொருளையும் வேர்ப்பொருளையும் அறிய, தமிழே பெருந்துணையாக உள்ளது. இதன் உண்மைத்தன்மையைப் பர்ரோ, எமினோ ஆகிய மேல்நாட்டு மொழியியல் அறிஞர்கள் ஆய்ந்து தொகுத்துரைத்த 'திராவிட மொழிகளில் ஒப்பிலக்கண வேர்ச்சொல் அகராதி' (Dravidian Etymologjcal Dictionaries – Burrow & Emeneau) நூல்வழி காணலாம்.

தமிழின் செவ்வாம்பல், 'கெம்பாவல்' எனவும், செவ்வாழை – 'கெம்புபாளெ' எனவும், பாம்பு – 'ஹாவு' எனவும், பல்லி – 'ஹல்லி' எனவும் கன்னடத்தில் திரிந்துள்ளன. இக் கன்னட வழக்குகளின் உண்மைப்பொருளைத் தமிழுடன் உறவுபடுத்தித்தான் அறியமுடியும்.

தம்முன், தம்பி என்பன தமிழ்ச்சொற்கள். தன்முன் பிறந்தவன் - தம்முன்; தன்பின் பிறந்தவன் – தம்பி. தெலுங்கு, தம்பியைத் 'தம்முடு'என்கின்றது. குதித்தோடும் குதிரையை அதே தெலுங்கு, 'குர்ரமு' என்கிறது. ஊசல் – ஊஞ்சல் என்பன நல்ல தமிழ்ச்சொற்கள். தமிழின் ஊஞ்சலைத் துளு, 'உஜ்ஜாலு' என்றுரைக்கும்.

## இந்தோ ஐரோப்பிய வேர் நானூற்று அறுபத்தொன்று

உலகின் மிகப்பெரிய மொழிக்குடும்பம், இந்தோ – ஐரோப்பியம். எழுநூற்று எழுபது கோடிக்கும் மேற்பட்ட உலக மக்கள் தொகையில், நானூறு கோடிக்கும் மேற்பட்டோர் இந்தோ ஐரோப்பியம் பேசுவோர். இக்குடும்பமொழிகள், நூற்றுக்கும் மேற்பட்டனவாக உலகில் உள்ளன. இம்மொழிகள் யாவற்றிலும் வழங்கும் சொற்கள் கோடிக்கணக்கில் இருக்கும். ஆயின், இக்கோடிக்கணக்கான இந்தோ ஐரோப்பிய மொழிகளின் சொற்களுக்கும் நானூற்று அறுபத்தொன்றே வேர்ச்சொற்களாக உள்ளன என்பார், ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் மாமேதை கீற்று (Walter Skeat). இதன்வழி, வேர்ச்சொற்கள் நிலையான எண்ணிக்கை உடையன என்பதையும் அவற்றிலிருந்தே சொற்கள் காலந்தோறும் பெருகிப் பெருகி உருவாகின்றன என்பதையும் நம்மால் அறியமுடிகிறது.

உலக மொழிகள் பலவற்றையும் வேர்ச்சொல் ஆய்வின்மூலம் மொழியறிஞர்கள் இன்று ஒன்றாக்கிக் காண்கின்றனர். அவ்வகை ஆய்வின் முடிவாக, உலகமொழிக்குடும்பங்களை ஒரு பெருங்குடும்பத்தில் அவர்கள் அடக்கிவிடுகின்றனர்.

இந்தோ ஐரோப்பிய மொழிகள் அனைத்திற்கும் உரியனவாகக் காட்டப்பட்டுள்ள வேர்ச்சொற்கள், பல்வேறு குடும்ப மொழிகளுக்கும் உரியனவாகப் பொருந்தியுள்ளன. திராவிடமொழிக் குடும்பங்களுக்குரிய வேர்ச்சொற்கள் எனப்படுவன பலவும், இந்தோ ஐரோப்பிய மொழிகளின் வேர்களுடனும் பொருந்தியிருப்பதைக் கால்டுவெல் முதலான அறிஞர்கள் உறவுபடுத்தி ஆய்ந்துள்ளனர்.

### அறிவோம் தெளிவோம்

**கூழாங்கல்:** மலைமேலிருந்து ஆற்றிலும் அருவியிலும் அடித்து வரப்படும் கூரான கற்கள், பல இடங்களிலும் மோதி மோதிக் குழைவாகிவிடுகிறது. இக்குழைவான கல்லே கூழ் + ஆம் + கல் = கூழாங்கல் என்றானது.

## வேர்ச்சொல் ஆய்வுக் கோட்பாடு

இன்றைய உலக மாந்தர் அனைவரும், 'மதிமாந்தர்' (Homo sapiens) எனப்படுவர். இவர்களின் மூலஇடம் இன்றைய ஆப்பிரிக்கா. ஒன்றரை இலக்கம் ஆண்டுகளுக்குமுன், இவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்டு, உலகம் முழுவதும் பரவினர். எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் தென்னிந்தியாவிற்கு வந்துவிட்டனர். இதன்காரணமாகவே தென்னிந்தியா, மாந்தர்தம் மூலமொழி தோன்றிய இடமாக இருக்கலாம் என வேர்ச்சொல் ஆய்வறிஞர்கள் இன்று கருதுகின்றனர். மொழி தோன்றிய காலம் 60 – 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் என்னும் கருத்தினையும் இவ்விடத்தில் பொருத்திப் பார்க்கலாம்.

வேர்ச்சொல் ஆய்வறிஞர்கள், மூலமொழி எது என்பதை இருகோட்பாட்டின் மூலம் ஆய்வுசெய்து வருகின்றனர். ஒன்று, ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பேசப்படுகின்ற மொழிகள் யாவற்றிற்கும் உரிய மூலமொழியைக் கண்டறிவது. இரண்டு, உலகம் முழுவதும் பேசப்படுகின்ற மொழிகளுக்கு உரிய மூலமொழியைக் கண்டறிவது. முதலாவதை 'நாசுதிராதிக்' (Nostratic Studies) ஆய்வு என்றும் இரண்டாவதைத் 'தாய்மொழி' (Mother Tongue studies) ஆய்வு என்றும் கூறுகின்றனர்.

*Mother Tongue accepted Article.*

*Nostratic As seen from South India (Article)*

*– Stephan Hillyer Levitt, G. Arasendiran and P. Ramanathan*

## நிறைவுரை

தமிழின் வேர்ச்சொற்கள் தமிழை வளர்த்ததுடன் மட்டுமல்லாமல், உலக மொழிகளின் வேர்ச்சொற்களுடனும் ஒன்றுள் ஒன்றாகிக் கலந்திருக்கின்றன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கேற்பத் தமிழ் வேர்ச்சொல் ஆய்வு, உலக மக்களை உறவினராக ஆக்கிக்காட்டுகிறது; உலக ஒற்றுமைக்கும் பெருந்துணை புரிகிறது.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 186 04-04-2020 15:04:01

# கண்ணாடி

**கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'வியலென் கிளவி' சுட்டும் பொருள்

   அ) அகலம் ஆ) நீளம் இ) ஆழம் ஈ) உயரம்

2. தென்னக மொழிகளில் தமிழே மூத்தது, முதன்மையானது என நிறுவியவர்

   அ) பாவாணர் ஆ) கால்டுவெல் இ) கீற்று ஈ) எமினோ

3. வேர்ச்சொல் ஆய்வுக்கான தரவுகளுள்ள தொல்காப்பிய இயலைத் தேர்ந்தெடுக்க.

   அ) பெயரியல் ஆ) வினையியல் இ) இடையியல் ஈ) உரியியல்

4. பின்வரும் கூற்றையும் அதற்குரிய காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று : ஒன்றோடொன்று பொருந்தி வளர்வதால், மூங்கில் 'அமை' எனப்பட்டது.

   காரணம்: 'அம்' என்னும் வேர்ச்சொல்லிற்குப் பொருந்துதல் என்பது பொருள்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

   இ) கூற்று சரி, காரணம் போதுமானதன்று ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி

5. புடல்காய் என்ற சொல்லுக்குரிய வேரைத் தேர்ந்தெடுக்க.

   அ) புடல் ஆ) புழல் இ) புழை ஈ) புடலை

## குறுவினா

1. இயல்பான அகராதி – வேர்ச்சொல் அகராதி வேறுபடுத்துக.
2. வேர்ச்சொற்கள் என்று எவற்றைக் கூறுகிறோம்? ஏன்?
3. 'அமலை' என்னும் சொல்லின் வேர்மூலம் யாது?
4. 'நாசுதிராதிக் ஆய்வு' குறிப்பு வரைக.
5. வேர்ச்சொல் ஆய்வினால் விளையும் நன்மைகள் இரண்டை எழுதுக.

## சிறுவினா

1. வேர்ச்சொல் ஆய்வின் தோற்றம் பற்றி எழுதுக.
2. இயல்பான அகராதியும், வேர்ச்சொல் அகராதியும் 'உவரி' என்னும் சொல்லுக்கு எவ்வாறு விளக்கமளிக்கின்றன?
3. வியல் – வியர் – வேர் விளக்குக.
4. வேர்ச்சொல் ஆய்வு – ஒரு விருப்பமான ஆய்வு எனப் பாவாணர் எவ்வாறு நிறுவுகிறார்?
5. இந்தோ – ஐரோப்பிய வேர்ச்சொற்கள் குறித்து அறிஞர் கீற்று கூறுவது யாது?

## நெடுவினா

1. தமிழ், பிற திராவிட மொழிகளுடன் வேர்ச்சொல் ஆய்வில் எவ்வாறு பொருந்தியுள்ளது? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
2. 'சாரல்' என்னும் சொல் எவ்வாறெல்லாம் திரிந்து வழங்கியது என்பதை விளக்குக.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 187 04-04-2020 15:04:01

# திறனாய்வு

## அறிமுகம்

திறனாய்வும் இலக்கியம்போல ஒரு கலை எனவும் வாசிக்கப்பட்ட பனுவல்களில் மறைந்திருக்கும் உண்மைகளைக் கண்டு பிடித்துச் சொல்லும் அறிவுத்துறை எனவும் இரண்டு கருத்துகள் உள்ளன. இலக்கியவளம் நிறைந்த எல்லா மொழிகளிலும் திறனாய்வும் குறிப்பிடத்தக்க பணியைச் செய்கிறது. இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் சிந்தனை வளர்ச்சிக்கும் திறனாய்வு பெரிதும் துணை செய்கின்றது. தமிழில் தொல்காப்பியர் காலம் தொடங்கி, இடைக்கால உரையாசிரியர்கள் வழியாகத் திறனாய்வுமுறை செயல்பட்டு வருகிறது.

இன்றைய காலகட்டத்தில், தனித் துறையாக உருவெடுத்துள்ள திறனாய்வு, மொழிக் கல்வியில் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. ஆகவே, மொழியின் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கற்க விரும்பும் மாணவர்கள், திறனாய்வு பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும்.

## திறனாய்வு – விளக்கம்

'திறனாய்வு' என்னும் சொல், நன்கு அறிமுகமான சொல்தான். ஏதேனும் ஒரு பாடல் அல்லது கவிதை குறித்து நயம் பாராட்டியிருப்பீர்கள்.துணைப்பாடக்கதைகளைப் பற்றி, உங்கள் கருத்துகளைக் கூறியிருப்பீர்கள். நீங்கள் செய்த இந்தச் செயல்பாடுகள் எல்லாம் திறனாய்வில்தான் அடங்கும். ஒரு திரைப்படம் பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தப் படம் எப்படி இருந்தது என்று யாரேனும் உங்களிடம் கேட்டால் என்ன சொல்வீர்கள்? திரைப்படத்தின் கதையமைப்பு, நடிகர்களின் நடிப்பு, இசையின் தன்மை, பாடல்கள் போன்ற பல செய்திகளை உங்களை அறியாமலேயே ஆராய்ந்து கூறுவீர்கள் அல்லவா? நீங்கள் செய்த ஆய்வுதான், திறனாய்வு. இன்னும் எளிதாகக் கூறவேண்டுமானால், உங்கள் நண்பரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று யாரிடமாவது கேட்டுப் பாருங்களேன். உடனே அவர்களைப்பற்றி எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து கூறிவிடுவார்கள்.

ஒரு பாடலைப் பற்றி இலக்கியநயம் பாராட்டுவதும் ஒரு நூலைப் பற்றி மதிப்புரை எழுதுவதும் திறனாய்வுகளே. இலக்கியப் பரப்பில் 'திறனாய்வு' என்ற சொல்லும் நாளிதழ் போன்ற ஊடகங்களில் 'விமர்சனம்' என்ற (வடமொழி) சொல்லும் வழக்கிலுள்ளன. திறனாய்வு என்பதைப்பற்றி அறிஞர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்று பார்க்கலாம்.

## திறனாய்வு –சில வரையறைகள்

விக்டர் யூகோ : "இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே திறனாய்வாகும்".

ஸ்பிங்கான் : "கலைஞன் எதைக் கூற முயல்கிறான்? அதில் எங்ஙனம் அவன் வெற்றி பெறுகிறான்? அவன் கூறுவது தகுதியுடையதுதானா? இவ்வினாக்களுக்கு விடை காண்பது திறனாய்வாகும்".

மேத்யூ ஆர்னால்டு : "உலகில் சிறந்ததென்று உணர்ந்து சிந்திக்கப் பெறுவதைத் தன்னலமற்ற முறையில் அறிந்து பரப்புவதற்கு முயற்சி செய்வது திறனாய்வாகும்".

எலியட் : திறனாய்வென்பது,ஒருபொதுமை முயற்சியாகத் திறனாய்வாளனைக் காட்டுவதாக இல்லாமல் கலைப்படைப்பைக் காட்டுவதாக, சமூகத்தின் கலைச்சுவையைச் சரியான நெறியில் உருவாக்கி வளர்ப்பதாக இருக்க வேண்டும்".

அ. ச. ஞானசம்பந்தம் : "திறனாய்வு என்று கூறினால், 'முடிவு கூறல்' அதனுள் அடங்கியிருத்தல் கண்கூடு".



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 188 04-04-2020 15:04:01

இனி,திறனாய்வின் வகைகள்,கோட்பாடுகள், திறனாய்வாளர்கள், அவர்களுக்குரிய தகுதிகள், திறனாய்வினால் விளையும் பயன்கள் ஆகியன குறித்துச் சுருக்கமாகக் காணலாம்.

## திறனாய்வுக்குரிய களம் – இலக்கியம்

தற்காலத்தில் திறனாய்வு என்ற சொல்லிற்குப் பரந்து விரிந்த பொருளுண்டு. மொழியியல், உளவியல், மானிடவியல், சமூகவியல், வரலாறு, அறிவியல் முதலிய பல துறைகளின் தாக்கத்தை இன்றைய இலக்கியத் திறனாய்வியலில் காணலாம் எனினும், திறனாய்வு என்னும் சொல் தனித்தியங்கும் ஓர் இலக்கியப்பிரிவையே குறிக்கிறது என அறிஞர் க. கைலாசபதி கூறுகிறார்.

## இலக்கியம் – அச்சிடப்பெற்றவையும் அச்சில் இடம்பெறாதவையும்

ஓர் இலக்கியத்தைத் திறனாய்வு செய்வதற்குமுன், அஃது இலக்கியம்தானா என அறிந்துகொள்ள வேண்டுமல்லவா! அப்படியானால் எது இலக்கியம்? எழுதப்பட்டதெல்லாம் இலக்கியமா? அல்லது அச்சிடப்பெற்றவையெல்லாம் இலக்கியமா?

எடுத்துக்காட்டாக விண்ணப்பம், தேர்வு, பஞ்சாங்கம், நாட்குறிப்பு, அறிவிப்பு, விளம்பரம், கடிதம் போன்றவையெல்லாம் எழுதப்படுகின்றன. அவ்வாறெனில் இவற்றை இலக்கியம் எனக்கூறுவதில்லை.அச்சிடப்பெற்று நாள்தோறும் வெளியாகும் செய்தித்தாள்களை இலக்கியம் என வகைப்படுத்துவதில்லை. ஏன் தெரியுமா? இவை செய்திகளைத் தெரிவிக்க மட்டுமே பயன்படுகின்றன. இவற்றைப் படிப்பதால் உங்களுக்குஎந்தவொருகற்பனையோ உணர்ச்சியோ எழுவதில்லை. அறிவியல் உண்மைகளும் கணக்கு முதலான புள்ளியியல் விவரங்களும்கூட அறிவூட்டவும் ஆர்வத்தைத் தூண்டவும் செய்கின்றன. ஆனால், அவையும் இலக்கியம் ஆகா.

அப்படியென்றால் எது இலக்கியம்? ஒரு நூலைப் படிக்கும்போது நம் மகிழ்ச்சியை மிகுவிப்பதாக அமைவதே இலக்கியம். அது கவிதையாக, செய்யுளாக, கதையாக, நாடகமாக, உரைநடையாக, கட்டுரையாக எனப் பல வடிவங்களில் அமையலாம். அவையாவும் அறிவையொட்டி மட்டும் அமைவதல்ல; கற்பனை மிகுந்த உணர்ச்சியையொட்டியும் அமைவனவாகும். மனிதனின் மொழியோடு தொடர்புகொண்டு அவனது சிந்தனைக்கோ, கற்பனைக்கோ, உணர்ச்சிக்கோ விருந்தாக அமைவன எல்லாம் இலக்கியங்களே. இவை அச்சிடப்பெற்று இலக்கிய எழுத்துகளாய் மிளிர்கின்றன என்றாலும், அச்சிடப்பெறாத சிலவற்றைக்கூட நாம் இலக்கியங்கள் எனக் கூறுகிறோம்.

ஒரு மொழியில் பேச்சும் உண்டு, எழுத்தும் உண்டு. எழுத்து வடிவம் பெறாது, பேச்சில் வழங்கப்படும் நாட்டுப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், ஆகியவற்றைத்தாம் நாம் இங்கே அச்சிடப்பெறாத இலக்கியங்கள் என்று குறிப்பிடுகிறோம். இவையும் இலக்கிய வரம்புக்குள்தாம் அமைகின்றன. நாம் ஏன் இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்? இலக்கியத் திறனாய்வு செய்ய வேண்டுமென்றால் இலக்கியங்களைப் பற்றியும் அவற்றின் வடிவம், கருத்து, தன்மை ஆகியவற்றைப் பற்றியும் நன்கு அறிந்திருக்க வேண்டும்

திறனாய்வுக்குரிய களத்தையும் எவை இலக்கியம் என்பதையும் அறிந்துகொண்ட நிலையில், உலக அளவில் இலக்கியங்களின் பொதுஇயல்புகளைக் குறித்துப் பேசும் அடிப்படைக் கலைச்சொற்கள் சிலவற்றை அறிந்துகொண்டு,திறனாய்வுக்குள் நுழையலாம். இலக்கிய வடிவங்கள் எல்லாவற்றிலும் இருக்கும் தன்மைகளைக் கொண்டு இலக்கியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவை:

1. செவ்வியம்
2. புனைவியம்
3. இயற்பண்பியம்
4. நடப்பியம்
5. நடப்பியம் அல்லாதன

இவ்வைந்து வகைப்பாடுகளைச் சுருக்கமாக அறிந்துகொள்ளலாம்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 189 04-04-2020 15:04:01

## செவ்வியம் (Classicism)

தொன்மையும் குறிப்பிட்ட இலக்கிய வரையறைகளைப் பின்பற்றுவதும் செவ்விய இலக்கியங்களின் அடையாளமாக இருக்கின்றன. தமிழின் செவ்விய இலக்கியங்களான அக, புறப்பாடல்கள் தொல்காப்பியம் கூறும் இலக்கிய வரையறைகளைப் பின்பற்றியுள்ளன என்பதைக் கவனத்தில் கொண்டால் செவ்வியல் தன்மை என்பது புரியலாம்.

## புனைவியம் (Romanticism)

கற்பனையின் அளவும் கதைமாந்தர்களின் பண்புகளும் மிகைப்படுத்தப்பட்ட தன்மையில் இருக்கும் இலக்கியங்கள், புனைவிய இலக்கியங்களின் அடையாளங்கள். தமிழில் எழுதப்பெற்ற காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றன புனைவியக்கூறுகள் கொண்டவை.

## இயற்பண்பியம் (Naturalism)

கற்பனையின் அளவைக் கைவிட்டுவிட்டு, நடப்பதை அப்படியே எழுதிக்காட்டும் போக்கும், அதில் வெளிப்படும் திறனாய்வுப்பார்வையும் இயற்பண்பிய இலக்கியங்களின் அடையாளமாகக் கொள்ளத்தக்கன.

தமிழில் எழுதப்பெற்ற பள்ளு இலக்கியங்கள், தனிப்பாடல்கள் தொடங்கிப் புனைகதைகள் பலவற்றில் இயற்பண்பியக் கூறுகள் வெளிப்பட்டுள்ளன.

## நடப்பியம் (Realism)

இயற்பண்பியத்தின் மறுதலையாக உருவானதே நடப்பியம். நடந்த எல்லாவற்றையும் காலம், இடம் என்ற அளவில் முழுமையாக எழுத முடியாது.

ஆகவே, நடந்தனவற்றில் உண்மையின் பக்கமாக, எது சரியானது எனச் சுட்டிக்காட்டும் போக்கே இலக்கிய உருவாக்கத்தின் அடிப்படையாக அமையவேண்டும் என்று, வலியுறுத்தியவர்கள் உருவாக்கிய இலக்கியப் போக்கே நடப்பியம். அதிலும் மனித நேய நடப்பியம், விவரண நடப்பியம், ஆவண நடப்பியம், சமத்துவ நடப்பியம், மிகை நடப்பியம் எனப் பல வகைகள் உண்டு.

## நடப்பியம் அல்லாதன (Non–realism)

நடப்பிய இலக்கியத்தை மேலும் சிறப்பானதாக ஆக்கும் முயற்சியில் அதன்மீது பலவகையான விமரிசனங்கள் எழுப்பப்பட்டன. அவை ஒவ்வொன்றும் தனித்தனியான இலக்கியப் போக்குகளாக ஐரோப்பியத் திறனாய்வாளர்களால் வகைப்படுத்தப்படுகின்றன. குறியீட்டியம், அபத்தவியம், வெளிப்பாட்டியம், மனப்பதிவியம் எனப் பலவகை உண்டு. அவற்றை மேல் வகுப்புகளில் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

## திறனாய்வாளர்கள்

இலக்கியம் எவ்வளவு பழைமையானதோ, அவ்வளவு பழைமையானது அதனைப் பற்றிய திறனாய்வும் என அறிஞர்கள் கூறுகின்றனர். யாராவது ஒருவர் ஒரு பாடலையோ, ஓர் உரைநடையையோ எழுதியிருப்பார். அதனைப் படிப்பவர், ஆஹா, நன்றாக உள்ளது அல்லது மட்டமாக உள்ளது என்று கூறும்போதே திறனாய்வாளராகவும் அவர் மாறிவிடுகிறார். அதே வேளையில் படிப்பவர் எல்லாரும் திறனாய்வாளராக மாறுவதில்லை.

திறனாய்வாளர், படைப்பவருக்கும் படிப்பவருக்கும் இடையே ஒரு பாலமாக விளங்குகிறார். ஏன் தெரியுமா? ஓரிலக்கியம் படைக்கப்பட்டவுடன் படிக்கப்படலாம் அல்லது பல ஆண்டுக்குப் பின்னரும் படிக்கப்படலாம். அவ்விலக்கியம் உருவான காலச்சூழல், பின்னணி ஆகியவற்றைத் தெள்ளத் தெளிவாகத் திறனாய்வாளர்தாம் வெளிப்படுத்தியிருப்பார். இல்லையெனில், அவ்விலக்கியத்தைப் படிப்பவருக்குக் குழப்பம் ஏற்படும்.

எடுத்துக்காட்டாகப் பாரதியார் பாடல்கள் தோன்றியதன் பின்னணி, விடுதலை உணர்வை வேண்டி நின்ற காலமாக இருந்தது. இக்காலத்தில் அத்தகைய சூழல் இல்லை. எனவே, படைப்புகளை அக்காலத்திய சூழலோடு பொருத்தி, ஆய்வுசெய்பவர்தாம் திறனாய்வாளர். அவர், படைப்பாளிக்கும் படிப்பவருக்கும் இடையேயுள்ள தலைமுறை இடைவெளிகளையும் காலவேறுபாடுகளையும் குறைக்கிறார்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 190 04-04-2020 15:04:01

மற்றோர் எடுத்துக்காட்டு. எழுத்தாளர் புதுமைப்பித்தன், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவருடைய கதைகளில், அந்த மாவட்டத்து வட்டாரச் சொற்கள், பழக்கவழக்கங்கள், மொழிநடைகள் இடம்பெற்றிருக்கும். வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அக்கதைகளைப் படிக்கும்போது, அவர்களுக்குச் சில சொற்களுக்குப் பொருள் தெரியாமல் இருக்கலாம் அல்லது கடினமாகத் தோன்றலாம். இத்தகைய இடர்ப்பாடுகளையெல்லாம் திறனாய்வாளரே நீக்குகிறார்.

அதனால்தான் அவர், படைப்பாளரையும் படிப்பவரையும் இணைப்பதற்குப் பாலமாகச் செயல்படுகிறார். ஆகவே, ஓர் இலக்கியத்தைப் படைப்பவர், அதனைப் படிப்பவர், அதனைத் திறனாய்வு செய்பவர் ஆகிய மூவரும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டுள்ளனர். ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களாக இவர்களைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாகத் திறனாய்வு செய்வதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் எனப் பார்ப்போமா?

## திறனாய்வாளர்க்குரிய தகுதிகள்

ஓர் இலக்கியத்தைப் படைப்பது எவ்வளவு கடினமானதோ, அவ்வளவு கடினமானது திறனாய்வு. ஏன்? திறனாய்வு செய்வதற்குரிய தகுதி இல்லாதவர்கள், இலக்கியத்தை மதிப்பீடு செய்தால், அந்தத் திறனாய்வு தரமிழந்து போகும். அதனால்தான் திறனாய்வாளர்கள், சில அடிப்படைத்தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்; சில விதிமுறைகளுக்குட்பட்டு நடக்கவேண்டும்.

*1. நூல் புலமை:* திறனாய்வாளர், தாம் திறனாய்வு செய்யும் இலக்கியத்தோடு பிற இலக்கியங்களையும் ஒப்பிட்டுக் கூறவேண்டியிருப்பதால், அவருக்குப் பல நூல்களைப் பற்றிய ஆழ்ந்த புலமை வேண்டும்.

*2. விரிந்த சிந்தனை:* இலக்கியத்தைப் பன்முறையிலும் ஊடுருவிப் பார்ப்பதற்குத் திறனாய்வாளரின் சிந்தனைப் பரப்பு விரிதல் வேண்டும். இலக்கியத்தில் சொல்லப்பட்ட கருத்துகளை, அது சொல்லப்பட்ட முறையிலேயே புரிந்துகொள்ள இச்சிந்தனை உதவும்.

*3. பரந்த அறிவு:* இலக்கியக் கூறுகளைத் தொடர்புபடுத்தி அறிய, பரந்த அறிவு தேவை. திறனாய்வாளர், தாம் எடுத்துக்கொண்ட பொருள் கவிதை, புதினம், சிறுகதை, நாடகம் என எதுவாக இருந்தாலும், அப் பொருள் தொடர்பான பல நூல்களையும் கற்று, புலமை பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

*4. இலக்கியப் பயிற்சி:* எந்த ஒரு நூலிலும் உயிர்ப்புடைய பகுதிகளும் பொதுவான பகுதிகளும் இருக்கும். அந்நூலைப் பன்முறை படித்தால்தான், அவ்விரு பகுதியையும் பிரித்தறிய இயலும். ஆகையால், திறனாய்வு செய்பவர், குறிப்பிட்ட இலக்கியத்தில் பயிற்சி பெற்றிருத்தல் இன்றியமையாதது.

*5. நடுவுநிலைமை:* திறனாய்வாளர், தம் விருப்புவெறுப்புக்கு இடமளிக்காதவாறு திறனாய்வு செய்தல் வேண்டும். தம்முடைய நோக்கத்தை இலக்கியத்தில் புகுத்தாமல், படைப்பாளியின் நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு திறனாய்வு செய்யவேண்டும். உள்ளது உள்ளபடி, நிறைகுறைகளையும் சேர்த்தே மதிப்பிட வேண்டும். வள்ளுவர் வாய்மொழிக்கேற்பச் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் இருத்தல் வேண்டும். அதே வேளையில் நூலின் குணம், குற்றம் ஆகிய இரண்டையும் ஆராய்ந்து, அவற்றுள் எது மிகுதியாக உள்ளதோ, அதனை எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

மேற்கண்ட தகுதிகளோடு, படைப்பாளியின் தனித்திறனை வெளிப்படுத்துதல், பொதுமக்களை இலக்கியத்தின் மீது ஆர்வம்கொள்ளச் செய்தல், இலக்கியம் ஆக்க விரும்புவோர்க்குத் தரமுள்ள படைப்புகளை உருவாக்க உதவுதல் போன்றவற்றையும் திறனாய்வாளர்க்குரிய தகுதிகளாகக் கூறலாம்.

## தமிழில் திறனாய்வு தொடக்கம்

தமிழில், பழங்காலத்திலேயே திறனாய்வின் தொடக்கநிலைக் கூறுகள் இருந்தன. தொல்காப்பியம் இலக்கியம்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 191 04-04-2020 15:04:01

எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதைப் பேசுகிறது. திறனாய்வு என்பது, இலக்கியம் பற்றிய கருத்துகளைப் புலப்படுத்தச் செய்கிறது என்றால், 'உரை' என்பது அத்தகைய பணியைச் செய்துள்ளது எனலாம் எனத் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

### இருவகை உரைகள்

எவ்வகையான நூல்கள் என்பதன் அடிப்படையில், உரைகளை இரண்டாகக் கொள்ளலாம். ஒன்று, இலக்கண உரைகள். மற்றொன்று, இலக்கிய உரைகள். இலக்கணம், இலக்கியம் ஆகிய இரண்டிற்கும் உரை எழுதியவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளார். அதே வேளையில், பத்துப்பாட்டு என்னும் சங்க இலக்கிய நூலுக்கும் சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்திற்கும் உரை தந்துள்ளார்.

இலக்கண, இலக்கிய நூல்களின் உரையாசிரியர்கள், அந்நூல்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்ததுடன், ஆய்வுநோக்கிலும் திறனாய்ந்து, தமது கருத்துகளைப் புலப்படுத்தியுள்ளனர்.

## திறனாய்வு வகைகள்

மனத்தாலும் அறிவாலும் அறியப்படும் ஒரு பொருளை, அழகுற உணர்த்தும் படைப்பாக்கம் அல்லது கலைத்திறன் என்பது இலக்கியம் எனப்படுகிறது. இது நோக்கம், தேவை முதலியவற்றின் கருவியாக உள்ளது. இத்தகைய இலக்கியம் தன்னகத்தே பல பண்புகளையும், பல வழிமுறைகளையும், பல கருத்துநிலைகளையும் கொண்டிருக்கிறது. அவற்றை ஆராயவும் விளக்கவும் திறனாய்வு உருவாகிறது.

இத்திறனாய்வு பல அணுகுமுறைகளையும் வகைகளையும் கொண்டுள்ளது. இவற்றைக் கண்டறிவது, திறனாய்வின் ஆழமான பண்புகளையும் பரந்துபட்ட நெறிகளையும் அறிவதற்குத் துணை செய்யும். ஏனெனில், திறனாய்வு என்பது, ஒற்றைப் போக்குக் கொண்டதன்று; பன்முகமான பண்புகளும் வழிமுறைகளும் கொண்டது. எனவே, திறனாய்வின் வகைகளை இங்கு அறிவது மிகவும் தேவையாகிறது.

திறனாய்வு செய்வதற்குரிய வழிமுறைகளின் அடிப்படையில், திறனாய்வு வகைகள் அமைகின்றன. பல இலக்கியங்களிலிருந்து அவற்றின் இன்றியமையாத பண்புகள் சிலவற்றை மட்டும் அடையாளங்காட்டுவது, ஒருவகை. குறிப்பிட்ட ஒரு கொள்கை அல்லது பண்புநிலையை அளவுகோலாகக் கொண்டு, அதனைப் பல இலக்கியங்களோடு பொருத்திப் பார்ப்பது, இன்னொருவகை. அதாவது, திறனாய்வு செய்வதற்குரிய வழிமுறை அல்லது செய்முறையைப் பேசுவது, திறனாய்வின் வகை என்று அறியப்படுகிறது.

திறனாய்வு வகைகள் பலவாக இருந்தாலும், அவற்றுள் மிக அடிப்படையானவை எனப் பேராசிரியர் தி. சு. நடராசன் தமது, 'திறனாய்வுக் கலை' என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அவை, பின்வருமாறு:

1. பாராட்டுமுறைத் திறனாய்வு
2. முடிபுமுறைத் திறனாய்வு
3. விதிமுறைத் திறனாய்வு
4. செலுத்துநிலை அல்லது படைப்புவழித் திறனாய்வு
5. விளக்கமுறைத் திறனாய்வு
6. மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு
7. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு
8. பகுப்புமுறைத் திறனாய்வு

### பாராட்டுமுறைத் திறனாய்வு (Appreciative Criticism)

ஓர் இலக்கியத்தில் குறை காணாமல் அதன் நிறைகளை மட்டும் எடுத்துக்கூறுதல். எடுத்துக்காட்டாகக் கம்பராமாயணத்தைக் கூறலாம். இதனைப் பாராட்டிப் பல திறனாய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 192 04-04-2020 15:04:01

## முடிபுமுறைத் திறனாய்வு (Judicial Criticism)

சில வரையறைகளையும் விதிகளையும் அளவுகோலாகக்கொண்டு, குறிப்பிட்ட இலக்கியம் பற்றிய முடிபுகளைக் கூறுதல். எடுத்துக்காட்டாகத் தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பியப் பண்புகளை விதிகளாகக்கொண்டு, மணிமேகலைக் காப்பியத்தின் அமைப்பையும் பண்பையும் மதிப்பிட்டு, முடிவு கூறுதல்.

## விதிமுறைத் திறனாய்வு (Prescriptive Criticism)

சில விதிகளைத் தாம் திறனாய்வு மேற்கொள்ளும் இலக்கியத்தில் அப்படியே பொருத்திக் காணல்.

அன்பின் ஐந்திணையில், 'தலைவனோ தலைவியோ சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்' என்பது, தொல்காப்பிய விதி. இவ்விதியை நெடுநல்வாடையில் பொருத்திக் காண்கிறார் நச்சினார்க்கினியர். அந்நூலில், தலைவன் பெயர் சுட்டப்பெறவில்லைதான். ஆனால், 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகமொடு..' என்ற பாடலடியில், 'வேம்பு' என்பது, பாண்டிய மன்னர்களுக்குரிய அடையாள மாலை என வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. ஆகையால், இஃது அகநூல் அன்று, புறநூல். இந்நூலின் பாட்டுடைத் தலைவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே என்று நச்சினார்க்கினியர் உறுதியாகக் கூறுகிறார்.

## செலுத்துநிலை அல்லது படைப்புவழித் திறனாய்வு (Inductive Criticism)

எந்தப் படைப்பைத் திறனாய்வு செய்கிறோமோ, அந்தப் படைப்பின் வழியாகவே அதற்குரிய விதிகளை அமைத்துக்கொள்ளல்.

எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரத்தின் அடிப்படை அமைப்பையும் தனிச்சிறப்பையும் உற்றுநோக்கி, அப்படைப்புக்குரிய விதிகளை வருவித்தல். இது, செலுத்துநிலை அல்லது படைப்புவழித் திறனாய்வாகும்.

## விளக்கமுறைத் திறனாய்வு (Descriptive Criticism)

ஓர் இலக்கியப் படைப்பாளியையும், அவர் படைத்த இலக்கியத்தின் பல்வேறு கூறுகளையும் விளக்கமாக ஆய்வுசெய்தல்.

எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பற்றிய திறனாய்வு அதன் அமைப்பு, இயல்தோறும் பொருள் வைப்புமுறை, களவு, கற்பு ஆகியவற்றின் தனித்தன்மை, தமிழ் மரபுக்கேற்ற அமைப்பு ஆகியவற்றை விளக்கமாக எடுத்துரைத்தல்.

## மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு (Evaluative Criticism)

குறிப்பிட்ட இலக்கியத்தின் தரம், தகுதி, சிறப்பு, சீர்மை என்பனவற்றைப் பேசுவதோடு, அவ்விலக்கியத்தில் அமைந்திருக்கும் கூறுகளும், பண்புகளும், உண்மைகளும் இலக்கிய மதிப்பு உடையவை என ஆராய்ந்து கூறுதல்.

எடுத்துக்காட்டாகப் பாரதியாரின் 'குயில்பாட்டு' அவரைச் சிறந்த கவிஞர்களுள் ஒருவராகக் கருதச்செய்கிறது எனில், அதற்கான காரணங்களைச் சான்றுடன் காட்டுதல்.

## ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு (Comparative Criticism)

இருவேறுபட்ட இலக்கியங்களை எடுத்துக்கொண்டு, ஒப்பியல் முறையில் ஆய்வு செய்தல். அவ்வாறு ஒப்பிடும்போது, அவ்விரு இலக்கியங்களுக்குமிடையே ஓரளவாவது பொதுத்தன்மை இருத்தல் வேண்டும். ஒப்பீட்டுத் தளங்கள் பின்வருமாறு அமையலாம்.

- ஒரு நாட்டு இலக்கியத்துடன் பிற நாட்டு இலக்கியம்
- ஒரே படைப்பாளியின் வெவ்வேறு இலக்கியங்கள்
- ஒரே நாட்டிலுள்ள வெவ்வேறு மொழி இலக்கியங்கள்
- இலக்கிய நூலுடன் இலக்கிய நூல், இலக்கண நூலுடன் இலக்கண நூல். (இலக்கியத்துடன் இலக்கண நூலை



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 193 04-04-2020 15:04:01

ஒப்பிடுதல் கூடாது.)

- வழிநூல் அல்லது மொழிபெயர்ப்பு நூலுடன் மூலநூல்.

### பகுப்புமுறைத் திறனாய்வு (Analyatical Criticism)

குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளையும் கூறுகளையும் ஏதேனும் ஓர் அளவுகோல் அல்லது நோக்கம்கொண்டு பகுத்துக் காணல்.

எடுத்துக்காட்டாகச் சி. சு. செல்லப்பாவின் 'மௌனியின் மனக்கோலம்' என்னும் ஆய்வுக்கட்டுரை, எழுத்தாளர் மௌனியின் சிறுகதை உத்திகளையும் உண்மை நிலைகளையும் வேறுபடுத்தி விவரிக்கின்றது. இதன்மூலமாகத் தமிழ்ச் சிறுகதைகளின் பண்புகளும் சிறப்புகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இதுவரை, திறனாய்வின் வகைகளைப் பார்த்தீர்கள். இனி, அதன் அணுகுமுறைகளைக் காண்போம்.

### திறனாய்வு அணுகுமுறைகள்

ஓர் இலக்கியத்தைப் படித்துச்சுவைப்பது என்பது வேறு, அவ் இலக்கியத்தைத் திறனாய்வு செய்வது என்பது வேறு. சுவைப்பதற்கு அணுகுமுறை தேவையில்லை. ஆனால், திறனாய்வு செய்வதற்கு அணுகுமுறை இன்றியமையாததாக உள்ளது.

### திறனாய்வு அணுகுமுறை – விளக்கம்

ஒருவர் மற்றவரைப்பற்றி அறிந்து கொள்வதற்கும், அவருடன் நன்கு பேசுவதற்கும், அவர் மூலமாகச் செயல்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சில வழிமுறைகளைப் பின்பற்றுவர். அவற்றையே அணுகுமுறை என்கிறோம்.

அதுபோல, குறிப்பிட்ட ஓர் இலக்கியம் அல்லது இலக்கியங்களைக் கண்டு, நெருங்கி, அவற்றை எடுத்துச் சொல்வதற்கு, ஒரு வழிமுறை தேவைப்படுகிறது. அவ்வழிமுறைக்கு அணுகுமுறை என்று பெயர். (அணுகும் + முறை = முறையாக நெருங்கும் முறை)

### திறனாய்வு அணுகுமுறையின் நோக்கம்

திறனாய்வு என்னும் கடலைக் கடக்க உதவும் மரக்கலம் போன்றது அணுகுமுறை. ஓரிலக்கியத்தின் செய்ந்நேர்த்தி, சிறப்பு, கலையழகு என எல்லாவற்றையும் அவ்விலக்கியத்தின் வழியே சென்று காண்பது, திறனாய்வு அணுகுமுறையின் நோக்கமாகும்.

சரியான வழி, சரியான இலக்கைநோக்கிச் செல்ல உதவும். அதுபோல, ஒரு கொள்கையோடு கூடிய சரியான அணுகுமுறை, சரியான திறனாய்வுக்கு உதவும். சில வேளைகளில், அணுகுமுறை தவறாக இருந்தால், திறனாய்வும் தவறாக அமையும்.

### திறனாய்வு அணுகுமுறை வகைகள்

ஓர் இலக்கியத்தைத் திறனாயும்போது, ஆய்வுப்பொருளுக்கு ஏற்றவாறு அணுகுமுறை மாறும். எடுத்துக்காட்டாகத் திருக்குறளில் நூற்றுக்கணக்கான ஆய்வுப்பொருள்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றின் ஆய்வுக்கு ஏற்ப அணுகுமுறை மாறுவதைப் பின்வருமாறு காணலாம்.

'திருக்குறளில் உவமை நலன்' என்னும் ஆய்வுக்கு, மொழியியல் அணுகுமுறையும் 'திருக்குறளில் அறிவியல் கருத்துகள்' என்னும் ஆய்வுக்கு, அறிவியல் அணுகுமுறையும்

**அறிவோம் தெளிவோம்**

திறனாய்வு குறித்து, டாக்டர் ஜான்சன் என்பாரின் கூற்று

'திறனாய்வு' என்பவள் முயற்சி, உண்மை என்ற இருவருக்கும் தோன்றிய முதல்மகள். பிறந்தவுடன் இப்பெண், 'நடுவுநிலைமை' என்னும் செவிலித்தாயால், 'மெய்யறிவு' என்னும் அரண்மனையில் வளர்க்கப்பட்டாள். இளமையிலேயே இவளிடம் காணப்பெற்ற சிறப்பியல்புகள் காரணமாக, இவள் 'கற்பனை' என்பவனுக்குத் துணைவியாக அமைந்தாள்.

– இலக்கியக்கலை,
பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 194 04-04-2020 15:04:02

'திருக்குறளும் நாலடியாரும்' என்னும் ஆய்வுக்கு, ஒப்பியல் அணுகுமுறையும் தேவைப்படுகின்றன. ஆகவே, ஆய்வுப்பொருளுக்கு ஏற்றவாறு அணுகுமுறைகளும் மாறுகின்றன. அவ்வகையில், பல திறனாய்வு அணுகுமுறைகள் உள்ளன. அணுகுமுறைகளுள் சிலவற்றை மட்டும் மிகச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

### 1. அறநெறி அணுகுமுறை (Moralisticism)

மனித சமூகத்தில் தொன்றுதொட்டு மரபுவழியாக வந்தவை அறங்கள். இவற்றை மையமாகக்கொண்டு, இலக்கியங்களை அணுகுவது, அறநெறி அணுகுமுறை.

தமிழ் இலக்கிய வரலாற்றில், பெரும்பாலான நூல்கள் அறம் உரைப்பனவாக உள்ளன. "அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே" என்று இலக்கணம் கூறுகிறது. "தன்னெஞ்சறிவது பொய்யற்க", "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" எனத் திருக்குறள் சமயஞ்சாரா அறத்தைக் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில் மூன்று உண்மைகள் உணர்த்தப்படுகின்றன. அவை, அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பன. இவை மூன்றும் சிலம்பின் மையக்கருத்துகள். இந்நூலின் நிகழ்ச்சிப் புனைவுகள் யாவும் இம் மையக்கருத்துகளைச் சுற்றியே அமைகின்றன. மனித சமுதாயத்தில் இவை மதிப்பு வாய்ந்த அறங்களாக உள்ளன. இத்தகைய அறக்கோட்பாடுகள், இலக்கியங்களை அளவிட உதவுகின்றன.

ஆகவே அறவியல் அணுகுமுறை, இலக்கியத்தில் வெளிப்படும் ஒழுக்கமுறையை ஆராய்வதோடு, இலக்கியத்தைத் தரம் பிரித்தும் கூறுகிறது.

### 2. சமுதாயவியல் அணுகுமுறை (Sociologism)

சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளே, இலக்கியங்களின் கருப்பொருளாக அமைகின்றன. அதனால்தான் இலக்கியம் என்பது, 'வாழ்க்கை நிகழ்வுகளை எதிரொளிக்கும் காலக்கண்ணாடி' எனவும் 'சமுதாயத்தின் புலப்பாடு' எனவும் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே, இலக்கியத்தில் பதிவாகும் மக்களின் சமுதாயக்கூறுகளை ஆராய்ந்து தொகுப்பதே, சமுதாயவியல் அணுகுமுறை.

சமுதாயப் பின்னணி அல்லது களம், சமுதாய நிறுவனங்கள், குடும்பம் அதன் வகைகள், சமூக உறவுகள், கிராம நகர வாழ்க்கை, இனம். ஊர், நம்பிக்கைகள், சமூக மதிப்புகள், ஒழுக்கம் முதலான நற்பழக்கங்கள், நீக்கவேண்டிய தீய பழக்கங்கள், சமுதாயச்சிக்கல்கள், சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் முதலியன சமுதாயவியல் அணுகுமுறை சார்ந்து ஆராயப்படுகின்றன.

தமிழ்ச் சமூக வரலாற்றுக்குக் குறிப்பாகப் பழந்தமிழ்ச் சமூகத்தை அறிந்துகொள்ள, சமுதாயவியல் அணுகுமுறைகள் உதவுகின்றன. இவ் அணுகுமுறைகள்

#### அறிவோம் தெளிவோம்

திறனாய்வுக்கு இணையான ஆங்கிலச் சொல், 'criticism'. இச்சொல், 'கிரிட்டிகோஸ்' என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகும். இதன் பொருள், பிரித்துப் பார்ப்பதும் தீர்ப்புச் சொல்வதும் ஆகும். 'கிரிட்டிசிஸம் என்பதை, ஒரு கலைச்சொல்லாக முதலில் பயன்படுத்தியவர் ஜான் டிரைடன் (John Dryden) (18 ஆம் நூற்) என்னும் ஆங்கிலக் கவிஞர் ஆவார். அதற்கு முன்னால் Critic என்ற சொல்லைப் பயன்படுத்தியவர், சிந்தனையாளர் பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon) (1605).

தமிழில் criticism என்ற சொல்லுக்கு இணையாக விமர்சனம் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர், பேரா. ஆ. முத்துசிவன் (1944). 'விமரிசை' என்ற வடமொழி வழக்கிலிருந்துவந்த இச்சொல்லுக்குப் பாராட்டுதல், விளக்கமாகவும் விரிவாகவும் சொல்லுதல் என்று பொருள். தமிழில், இச்சொல்லுக்கு இணையாகத் 'திறனாய்வு' என்ற சொல்லை வழக்கத்தில் விட்டவர், பேரா. அ. ச. ஞானசம்பந்தன். (1953).

– திறனாய்வுக்கலை,
பேராசிரியர் தி. சு. நடராசன்



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 195 04-04-2020 15:04:02

பழைமையானவையாகவும் அதே வேளையில் பரவலாகச் செய்யப்படுவனவாகவும் உள்ளன; இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள நெருக்கத்தை, அதன் இயங்குதிறனாய்க்கொண்டு, இவை அமைகின்றன.எனவே,இவைபலகோணங்களில் வெளிப்படுகின்றன.

சமுதாய அணுகுமுறைகள் குறிப்பாகச் சமுதாயப் பின்புலம் காணுதல், குறிப்பிட்ட இலக்கியம் தோன்றுவதற்குக் குறிப்பிட்ட பின்புலமே காரணமாதல் என்ற முறையில் ஆராய்கின்றன. எடுத்துக்காட்டாகத் தமிழ்ச் சிறுகதைகளின் தொடக்க காலத்தில் விதவையர் துன்பம், குழந்தைத் திருமணத்தின் கொடுமை முதலியன மிகுதியாகவே இடம்பெற்றிருக்கின்றன. அதே வேளையில், அண்மைக்காலச் சூழலில் அத்தகைய கருப்பொருளைக் காண்பது அரிது. ஏனெனில், திருமணம் ஆகாத முதிர்கன்னியர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளே, இப்போதைய புதினங்களில் இடம்பெறுகின்றன. அதுமட்டுமன்றிப் பெண்கள் எழுச்சி, பெண்ணியச் சிந்தனைகள் முதலியனவும் பெருகி வருகின்றன.

### 3. உளவியல் அணுகுமுறை (Psychoanalyticism)

மனித மனம்சார்ந்த பல்வேறு கருத்தாக்கங்களை முன்வைத்து, இலக்கியத்தை அணுகித்திறனாய்வது, உளவியல் அணுகுமுறை. சிக்மண்ட் ஃபிராய்டு என்பவர் உருவாக்கிய உளப்பகுப்பாய்வுக்கோட்பாட்டின் அடிப்படையில், இவ் அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது.

உளவியல் அணுகுமுறையானது, இலக்கியத்தில் சித்திரிக்கப்படும் கதைமாந்தர்களின் மனங்களையும் நடத்தைகளையும் அறியவும் படைப்பாளியின் மனவெளிப்பாடுகளை அறியவும் அவ் இலக்கியத்தைப் படிப்பவர்தம் மனவுணர்களுக்கு ஏற்றவாறு அமைகிற கூறுகளை அறியவும் என மூன்று அடிப்படைகளில் செயல்படுகிறது.

எடுத்துக்காட்டாக, மு. வரதராசனாரின் சில புதினங்களில் காணாமல் போவதாக ஒரு கதைப்பாத்திரம் இடம்பெற்றிருக்கும். காரணம், மு. வ. குழந்தைப்பருவத்தில் காணாமல் போய், பிறகு கண்டுபிடிக்கப்பட்டார் என்பதுதான்.

சிலப்பதிகாரத்தில், கண்ணகி காணும் 'தீக்கனவு', அவளுடைய குழப்பமான மனநிலையின் வெளிப்பாடேயாகும். இவ் உளவியல் அணுகுமுறை, இலக்கியக் கதைமாந்தர்களின் மனநிலை தொடர்பான பல கூறுகளிலும் கவனம் செலுத்துகிறது.

ஆகவே, உளவியல் அணுகுமுறையானது, இலக்கியத்தின் புரியாத இடங்களைப் புரிந்துகொள்ளவும், உட்பொருள்களைக் குறிப்பிட்ட ஒரு கோணத்தில் விளங்கிக்கொள்ளவும் பெரிதும் உதவுகிறது.

### 4. மார்க்சிய அணுகுமுறை (Marxism)

பொருளையும் அதன் இயக்கத்தையும் முதன்மையாகவும் மூலமாகவும் கொண்டு, உலகத்தையும் அதன் வாழ்வியல் உத்திகளையும் விளக்குவது மார்க்சியம். இக்கோட்பாடு, அடிப்படையில் இலக்கியத்தை ஆய்வு செய்யும் அரசியல், பொருளாதார, சமுதாய, தத்துவமே ஆகும். இக்கோட்பாட்டைக் கார்ல் மார்க்ஸ் என்பவர் உருவாக்கினார். அவர், சமூகம் வர்க்கமாகப் பிளவுபட்டிருப்பதை இனங்கண்டார். சமுதாய ஏற்றஇறக்கங்களுக்குப் பொருளே அடிப்படைக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

பிற தத்துவங்கள் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க, மார்க்சியம் பொருள் முதல் என்பதை மையமாகக் கொண்டுள்ளது. மக்களிடமிருந்து தோன்றும் இலக்கியம், மக்களை நோக்கியே செயல்படுகின்றது. இதுதான் அதன் பொருண்மை. அதாவது, இலக்கியத்தை மக்களோடு நெருங்கச் செய்வதே மார்க்சிய திறனாய்வு அணுகுமுறையின் அடிப்படைப் பண்பாகும்.

### 5. அமைப்பியல் அணுகுமுறை (Structuralism)

ஓர் அமைப்பு என்பது, பல பகுதிகளை உடையது. அவை ஒவ்வொன்றும் ஆற்றலும்

திறனும் உடையன. அமைப்பின் உறுப்புகள் சிதையுமானால், கட்டமைப்பும் சிதைந்துவிடும். இக்கருத்தின் அடிப்படையில், இலக்கியத்தை அணுகுவது, அமைப்பியல் அணுகுமுறை.

இலக்கியத்தை ஆய்வுக்கென எடுத்துக்கொள்ளும்போது, அதனைத் தனக்குள் பல உறுப்புகள் கொண்ட குறிப்பிட்ட ஓர் ஒழுங்கமைவுடன்கூடிய ஓர் அமைப்பாக அமைப்பியல் காண்கிறது. குறிப்பிட்ட அமைப்பின் பண்புகளை அல்லது கூறுகளை அமைப்பிற்கு வெளியிலிருந்து ஆராயக்கூடாது. அவ் அமைப்பிற்குள்ளே இருந்துதான் ஆராய்தல் வேண்டும் என்பதை, அமைப்பியல் அணுகுமுறை வலியுறுத்துகிறது.

அமைப்பியல் அணுகுமுறை, இலக்கியங்களில் எவ்வாறு ஆராயப்படுகிறது என இனிக் காண்போம். இலக்கியங்களுள் கதைவடிவமும் ஒன்று. இக் கதைவடிவங்களில் வினைநிகழ்வுகளின் கட்டுக்கோப்பும், கதைப்பின்னலும் ஆராயப்படுகின்றன. கதையமைப்பைத் தீர்மானிப்பதில், கதைப்பின்னல் ஆற்றலுடையதாக விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, நாஞ்சில் நாடனின் 'மிதவை' நாவலைக் குறிப்பிடலாம். படித்த இளைஞன் ஒருவன், சரியான வேலை கிடைக்காமல், தமிழ்நாட்டிலிருந்து நெருக்கடி மிகுந்த மும்பைக்குச் செல்கிறான். அங்கே காலூன்ற முடியாமல், வெறும் மிதவையாய் அலைந்து அவதியுறுகிறான். இஃது அந்த புதினத்தின் கதைப்பின்னலாக விளங்குகிறது.

இக்கதையின் பாத்திரப்படைப்பே குறிப்பிடத்தக்க வினைநிகழ்த்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே, வினை நிகழ்த்துகிற பாத்திரங்களின் வைப்புமுறையும் அவற்றை இடம் நகர்த்தும் முறையும் அமைப்பியல் விளக்கத்திற்கு உட்பட்டதாகும்.

ஆகவே, இலக்கியத்தின் பண்புநிலைகளை அவற்றிற்கு வெளியே போகாமல், உள்ளேயே நின்று, அவற்றின் கட்டுமானங்களை மையமாகக்கொண்டு பேசுவதே அமைப்பியல் அணுகுமுறையாகும்.

திறனாய்வு குறித்துப் பல செய்திகளைப் புரிந்துகொண்ட நாம், இக்கட்டுரையின் நிறைவாகத் திறனாய்வின் பயன்களையும் அறிந்துகொள்வோம்.

**அறிவோம் தெளிவோம்**

ஆங்கிலத்தில் விமர்சனத்திற்கென்றே தனிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. Saturday Review of Literature என்ற விமர்சனப் பத்திரிகையில் வெளிவரும் புத்தக விமர்சனங்களைப் படித்தால், ஒரு நூலைப்பற்றி வாசகன் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமோ, அத்தனையையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

இலக்கிய விமர்சனம், ரகுநாதன்.

## திறனாய்வினால் விளையும் பயன்கள்

- இலக்கியங்களைச் சுவைத்துப் பாராட்டவும் சிறந்த கருத்துகளைத் தேர்ந்து அறியவும் திறனாய்வு பயன்படுகிறது.

- மூலநூல்களைக் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது.

- புதிய நூல் வெளியீடுகளை உணர்த்துவதுடன், சிறந்த நூலாசிரியர்களையும் அறிமுகப்படுத்துகிறது.

- இலக்கியம் பல கோணங்களில் ஆய்வு செய்யப்படுவதால், நூலாசிரியனின் ஆளுமை புலப்படுகிறது. எனவே திறனாய்வாளன், நூலாசிரியனைப்போல வாழ்க்கை பற்றிய விளக்கத்தைத் தர முடிகிறது.

- குறுகிய காலத்தில் சிறந்த நூல்கள் அனைத்தையும் படிப்பதற்குத் திறனாய்வு உதவுகிறது. தாய்மொழி இலக்கியங்களை மட்டுமன்றிப் பிறமொழி இலக்கியங்களையும் அறிந்துகொள்ள ஓரளவு துணை செய்கிறது.

- இலக்கியத்தின் சுவையான பகுதிகளை அறிந்துகொள்ள உதவுகிறது. விளக்கம் பெறவேண்டிய கருத்துகளையும் தெளிவாக்குகிறது.

- சிறந்தஇலக்கியங்களைத்தேர்ந்தெடுக்கச் செய்வதுடன், சிறப்பில்லாதனவற்றை இனங்காணவும் வழிகாட்டுகிறது.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 197 04-04-2020 15:04:02

## சில திறனாய்வு அணுகுமுறைகள்

| | | |
|---|---|---|
| அமைப்பியல் (Structuralism) | ஒப்பியல் (Comparativism) | புதுத்திறனாய்வு (New Criticism) |
| அழகியல் (Aestheticism ) | சமுதாயவியல் (Sociologism) | புது வரலாற்றியல் (New Historicalism) |
| அறவியல் (Moralisticism) | சூழலியல் (Ecoism) | புனைவியல் (Romanticism) |
| அறிவியல் (Scientific) | தத்துவவியல் (Philosophism) | பெண்ணியம் (Feminism) |
| அறிவுறுத்தல் (Didacticism) | தொல்படிமவியல் (Archetypalism) | மார்க்சியம் (Marxism) |
| ஆன்மிகஇயல் (Spiritualism) | நடப்பியல் (Realism) | மானுடவியல் (Anthropologism) |
| இயற்பண்பியல் (Naturalism) | நவீனத்துவம் (Modernism) | மிகை நடப்பியல் (Surrealism) |
| உருவவியல் (Formalism) | பின்அமைப்பியல்(Post – Structralism) | மொழியியல் (Linguisticism) |
| உளவியல் (Psychoanalyticism) | பின்காலனித்துவம் (Post Colonialism) | வடிவவியல் (Formalism) |
| எடுத்துரைப்பியல் (Narrativism) | பின்நவீனத்துவம் (Post – Modernism) | வரலாற்றியல் (Historicalism) |

# கலைச்சொற்கள்

Ist Person – Nominative Form – தன்மை – எழுவாய்

IInd Person – Nominative Form – முன்னிலை – எழுவாய்

IIIrd Person – படர்க்கை

| | |
|---|---|
| Abstract Noun | பண்புப்பெயர் |
| Adjective | பெயரடை |
| Adjectival Clause | பெயரடைத் தொடர் |
| Adjective – Noun Concord | பெயரடை – பெயர் இயைபு |
| Adverb | வினையடை |
| Adverbial Clause | வினையடைத் தொடர் |
| Auxiliary Verb | துணைவினை |
| Case | வேற்றுமை |
| Collocation | சொல்லிணைவு |
| Conjunctives | இணைப்பிடைச் சொற்கள் |
| Contextual Meaning | சூழற்பொருள் |
| Criticism | திறனாய்வு |
| Dictionary | அகராதி |
| Etymological dictionary | வேர்ச்சொல் அகராதி |
| Gender – Human | பால் – உயர்திணை |
| Gender – Non Human | பால் – அஃறிணை |
| Grammatical | இலக்கணப்பொருள் |
| Grammatical relations | இலக்கண உறவுகள் |
| Imperative | ஏவல் வினைமுற்று |
| Lexical | அகராதிப்பொருள் |
| Link language | இணைப்பு மொழி |
| Link verb | இணைப்பு வினை |
| Morphological Level | உருபனியல் நிலை |
| Morphological relations | உருபனியல் உறவுகள் |
| Mother tongue | தாய்மொழி |
| Object – verb Concord | செயப்படுபொருள் – வினை இயைபு |
| Official language | அலுவலக மொழி |
| Philology | வேர்ச்சொல் ஆய்வு |
| Polysemy | பல பொருள் ஒரு சொல் |
| Postpositions | பின்னொட்டுகள் |
| Prepositions | முன்னொட்டுகள் |
| Pronouns | பதிலிப்பெயர்கள் |
| Relative participle | பெயரெச்சம் |
| Semantic Level | பொருண்மை நிலை |
| Semantic Relationship | பொருண்மை உறவு |
| Sentence Pattern | தொடரமைப்பு ஒழுங்கு |
| Subject – Verb Concord | எழுவாய் – வினை இயைபு |
| Syllable | அசை |
| Synonymy | ஒருபொருட் பன்மொழி |
| Syntactic Concord | தொடர் இயைபு |
| Syntactic Structure | தொடர்நிலை அமைப்பு |
| Verbal Participle | வினையெச்சம் |
| Word Order in Sentences | தொடர்களில் சொல் வரிசை |



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 198 04-04-2020 15:04:02

# கண்ணாடி

VAV695

**கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே திறனாய்வு" என்று கூறியவர்

அ) மேத்யூ ஆர்னால்டு ஆ) சி. டி. வின்செஸ்டர்

இ) விக்டர் யூகோ ஈ) ஸ்பிங்கான்

2. பின்வருவனவற்றுள் இலக்கியம் எனக் குறிப்பிட முடியாததைச் சுட்டுக.

அ) கதை ஆ) கவிதை

இ) நாட்குறிப்பு ஈ) நாட்டுப்புறப்பாடல்

3. பின்வரும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

கூற்று: சிலப்பதிகாரம், ஒரு புனைவிய இலக்கியமாகும்.

காரணம் : கற்பனையும், கதைமாந்தர்களின் மிகைப்படுத்தப்பட்ட பண்புகளும் புனைவிய இலக்கியங்களின் அடையாளங்களாகும்.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி.

இ) கூற்று தவறு, காரணம் சரி. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

4. பின்வருவனவற்றுள் திறனாய்வாளர்க்குரிய தகுதியாகக் கருதப்படாததைத் தேர்ந்தெடுக்க.

அ) இலக்கியப் பயிற்சி பெற்றிருத்தல் ஆ) விருப்புவெறுப்புக்கு இடமளித்தல்

இ) நடுவுநிலைமையுடன் திகழ்தல் ஈ) பன்னூற்புலமையுடன் விளங்குதல்

5. பின்வருவனவற்றுள் விதிமுறைத் திறனாய்வுக்குரிய சரியான விளக்கத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) சில விதிகளைத் தாம் மேற்கொள்ளும் இலக்கியத்தில் அப்படியே பொருத்திக் காணல்.

ஆ) குறிப்பிட்ட இலக்கியத்தின் பண்புகளையும் கூறுகளையும் ஓர் அளவுகோல் அல்லது நோக்கம் கொண்டு பகுத்துக் காணல்.

இ) இலக்கியப் படைப்பாளியையும் அவர் படைத்த இலக்கியத்தின் பல்வேறு கூறுகளையும் விளக்கமாக ஆய்வு செய்தல்.

ஈ) எந்தப் படைப்பை ஆய்வு செய்கிறோமோ, அந்தப் படைப்பின் வழியாகவே அதற்குரிய விதிகளை அமைத்துக்கொள்ளல்.

6. 'பாரதி – பாரதிதாசன் கவிதை ஒப்பீடு' என்னும் தலைப்பில் திறனாய்வு செய்வதற்குப் பொருத்தமான அணுகுமுறையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) மொழியியல் ஆ) அமைப்பியல் இ) ஒப்பியல் ஈ) உளவியல்

7. பின்வரும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடைக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று 1 : மனிதமனம் சார்ந்த பல்வேறு கருத்தாக்கங்களை முன்வைத்து, இலக்கியங்களை ஆராய்வது, உளவியல் அணுகுமுறை

கூற்று 2 : உளவியல் அணுகுமுறை தோற்றம் பெறுவதற்குச் சிக்மண்ட் ஃபிராய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாடே அடிப்படையாக அமைந்தது.

அ) கூற்று 1, கூற்று 2 சரியானவை ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு.

இ) கூற்று 1, கூற்று 2 தவறானவை ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி.

8. மார்க்சியக் கோட்பாட்டை உருவாக்கியவர் --------------.

அ) ஜான்சன் ஆ) ஜான் டிரைடன்

இ) காரல் மார்க்ஸ் ஈ) பிரான்சிஸ் பேக்கன்

9. பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாத கூற்றைச் சுட்டிக்காட்டுக.

அ) 'கிரிட்டிஸிசம்' என்னும் சொல், 'கிரிட்டிகோஸ்' என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகும்.

ஆ) திறனாய்வு என்பதும் விமரிசனம் என்பதும் ஒன்றே.

இ) ஓர் இலக்கியத்தின் திறனாய்வுக்கேற்ப, அதன் அணுகுமுறை மாறும்.

ஈ) அச்சிடப்பெற்றவை எல்லாம் இலக்கியங்களாகும்.

10. நெடுநல்வாடையில், பாண்டிய மன்னர்களுக்குரிய அடையாள மாலையாகக் குறிப்பிடுவதைத் தேர்ந்தெடுக்க.

அ) பனம்பூ ஆ) வேப்பம்பூ இ) தாழம்பூ ஈ) மாம்பூ

## குறுவினா

1. திறனாய்வு என்பதற்கு மேத்யூ ஆர்னால்டு தரும் விளக்கம் யாது?
2. அச்சிடப்பெறாத இலக்கியங்கள் என்பன யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.
3. திறனாய்வு தோன்றுவதற்குத் தொடக்கநிலையாக இருந்தது எது?
4. திறனாய்வு வகைகளுள் மிக அடிப்படையானவை எனத் தி. சு. நடராசன் குறிப்பிடுவனவற்றை எழுதுக.
5. திறனாய்வு அணுகுமுறையின் நோக்கத்தைக் குறிப்பிடுக.

## சிறுவினா

1. திறனாய்வாளர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை?
2. புனைவிய இலக்கியத்திற்கும் இயற்பண்பிய இலக்கியத்திற்குமுள்ள வேறுபாடு யாது?
3. நச்சினார்க்கினியரின் திறனாய்வுத் திறனை நெடுநல்வாடைவழி விளக்குக.
4. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வின் ஒப்பீட்டுத் தளங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?
5. அமைப்பியல் அணுகுமுறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 200 04-04-2020 15:04:02

## நெடுவினா

1. 'படைப்பாளிக்கும் படிப்பவருக்கும் இடையே பாலமாக விளங்குபவர் திறனாய்வாளர்' – இக்கூற்றை நிறுவுக.

2. திறனாய்வு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. திறனாய்வு அணுகுமுறைகளுள் எவையேனும் இரண்டைப் பற்றி விரிவாக எழுதுக.

4. திறனாய்வினால் விளையும் பயன்கள் யாவை?

## படிப்போம் பயன்படுத்துவோம்

1. தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதிகளைப் படித்து, அவற்றைப் பின்வரும் கூறுகளின் அடிப்படையில் அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| நரி, மரக்கிளையின் மீது அமர்ந்திருந்த காகத்தைப் பார்த்து, " ஆ! நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய். இவ்வளவு அழகான பறவைக்குக் கட்டாயம் இனிமையான குரல் இருக்கவேண்டும். ஆகவே, எனக்காக ஒரு பாடல் பாடிக் காட்டுவாயா?" என்று கூறியது. | *The fox said to the crow, which is sitting on the branch, "oh! What a pretty bird you are! Such a pretty bird must certainly have a sweet voice. Will you please sing a song for me?"* |

| இலக்கணக் கூறுகள் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| பெயரடை | | |
| வினையடை | | |
| இணைப்புச்சொல் | | |
| முன்னொட்டுகள் | | |
| பின்னொட்டுகள் | | |

2. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க. தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பயின்றுவரும் முன்னொட்டு/ பின்னொட்டுச் சொற்களை எடுத்தெழுதுக.

| | |
|---|---|
| *I live in a small village. It is close to Tiruvallur. My village is four miles from Tiruvallur. I go there to buy books. I set out from the town early in the morning. I usually go by bus. Sometimes my friend also comes with me. The bus goes in between paddy fields and a bridge.* | |



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 201 04-04-2020 15:04:02

3. கீழ்க்காணும் பழமொழிகள் உணர்த்தும் சரியான பொருளைக் குறிப்பிடுக.

(பழமொழியிலுள்ள சொற்கள் நேரடிப்பொருளை உணர்த்தா. குறிப்பாக வேறொரு பொருளை உணர்த்தும்.)

எ.கா. மண்குதிரையை நம்பி, ஆற்றில் இறங்கலாமா? – தகுதியில்லாதவரை நம்பி, நாம் செயலில் இறங்கலாமா?

1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல –
2. ஆயிரங் காக்கைக்கு ஒரு கல் –
3. எலி வளையானாலும் தனி வளை வேண்டும் –
4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் –
5. பாய்மரம் இல்லா மரக்கலம்போல –

4. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, 'மை' என முடியும் சொற்களைக் கண்டறிக.

எ.கா. செயலில் இருக்கவேண்டிய 'மை' – மடியின்மை (சோம்பலின்மை)

1. சொல்லில் இருக்கவேண்டிய 'மை' – – ----------------
2. அறிவில் இருக்கவேண்டிய 'மை' – – ----------------
3. வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய 'மை' – ------------------
4. நம் மதிப்பை உயர்த்தும் 'மை' – ------------------
5. அனைத்து உயிர்களிடத்தும் காட்டவேண்டிய 'மை' – ------------------

(குறிப்பு – சரியான விடையைக் கண்டறிய திருக்குறள் அதிகாரங்களை நினைவுகூர்க.)

5. கீழ்க்காணும் நுண்கதையை உளவியல் அணுகுமுறையில் திறனாய்வு செய்க.

செல் (லாப்) பேசி

வயதான தாயொருத்தி, சில நாளாக மனவருத்தத்துடன் இருந்தாள். அவள் வீட்டுக்கருகில் குடியிருந்த வளர்மதி என்ற பெண், இதனை அறிந்துகொண்டாள். அவள், அந்தத் தாயிடம் சென்று, மனவருத்தத்துக்கான காரணத்தைக் கேட்டாள். அப்போது, அந்தத் தாய், "என் மகன் வெளியூரில் வேலை செய்கிறான். அவனுடன் பேசி நெடுநாளாகிறது. அதனால்தான் வருத்தமாக உள்ளது" என்று கூறினாள். இதனைக் கேட்ட வளர்மதி, "அடடே, இதுதான் உங்கள் வருத்தத்துக்குக் காரணமா? கவலைப்படாதீர்கள். என் செல்பேசியைக் கொடுக்கிறேன். உங்கள் மகனுடைய செல்பேசி எண்ணுக்குத் தொடர்பு கொண்டு இப்போதே பேசலாம்" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள். அவள் கூறியதனைக் கேட்ட பின்னரும், அந்தத் தாயின் முகம் மேலும் வாட்டமடைந்தது. "ஏனம்மா, என்மீது நம்பிக்கை இல்லையா? இப்போதே வீட்டுக்குச் சென்று, என் செல்பேசியை எடுத்துக்கொண்டு வரட்டுமா?" என்று மீண்டும் வளர்மதி கேட்டாள். அதற்கு அந்தத்தாய், தம் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "நான் விரும்பிய போதெல்லாம் பேசுவதற்கு என் மகன்தான் ஏற்கெனவே ஒரு செல்பேசி வாங்கிக் கொடுத்திருக்கிறானே, இதோ, பார். இங்கே இருக்கிறது. ஆனால், நெடுநாளாக அதிலிருந்து எந்த அழைப்பும் வராததனால், செயல்படவில்லை என நினைத்து, அதனைச் சரிசெய்ய, கடைக்கு எடுத்துச் சென்றேன். ஆனால், கடைக்காரர் அந்தச் செல்பேசியில் எந்தக் குறைபாடும் இல்லை என்று கூறிவிட்டார். அப்படியிருந்தும், என் மகனிடமிருந்து இதுவரை அழைப்பு வராதது ஏன் என்றுதான் தெரியவில்லை" என்றாள். அந்தத்தாயின் கள்ளங்கபடமில்லா வெள்ளை உள்ளத்தையும் அன்பில்லா மகனின் கல்மனத்தையும் நினைத்த வளர்மதியின் கண்களுக்கு, அந்தத் தாயின் செல்பேசி, செல்லாப் பேசியாய்த் தெரிந்தது.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 202 04-04-2020 15:04:02

6. குறிப்புகளைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் குறுக்கெழுத்துப் புதிர்க்கட்டங்களை நிரப்புக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | | | 3 |
| | | | | | | | | | 4 |
| | 5 | | | | | | | | |
| | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| | | | | | | | | | 7 |
| | | | | | | 8 | | | |
| 9 | | | | | | | | | 10 |
| | | 11 | | | | | | | 12 |
| | | | 14 | | | | | 13 | |

(அடைப்புக்குறிக்குள் உள்ள எண்கள், எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறிக்கும்)

**இடமிருந்து வலம்**

1) ஆகுபெயரில் ஒரு வகை ------ (8)

5) செய்வினைத் தொடரைச் செயப்பாட்டுவினையாக மாற்ற இது தேவை (8)

6) ஆங்கிலம் இந்த மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது ------- (9)

9) ஆங்கிலமொழி ஆளுமை செலுத்தும் துறைகளுள் ஒன்று ------ (6)

11) சொல்லின் மூலத்தை அறிய உதவுவது ------ (5)

**வலமிருந்து இடம்**

4) மலையாளமொழி இந்தக் குடும்பத்தைச் சார்ந்தது ------ (6)

7) படைப்பவருக்கும் படிப்பவருக்கும் இடையே பாலமாக விளங்குபவர் ----- (7)

8) நூல்கள் இரண்டை ஒப்பிடுவதற்கு இந்த அணுகுமுறை தேவை ----- (5)

10) ஒருமையிலுள்ள சொற்களைப் பன்மையாக்க உதவும் விகுதி -------- (2)

13) குழூஉக்குறி வழக்குக்கு ஓர் எடுத்துக்காட்டு -------- (6)

**கீழிருந்து மேல்**

11) பருவகாலங்களுள் ஒன்று ---- (3)

12) சொல்லின் பொருளைக் காண, இது உதவும் ------- (4)

14) பொருண்மையியல் கோட்பாட்டைக் கூறும் மொழியியல் அறிஞர்களுள் ஒருவர் -- (3)

**மேலிருந்து கீழ்**

2) தமிழில் வினைக்குமுன் வந்து, வினையைச் சிறப்பிக்கும் ------- (4)

3) இலக்கியத்தில் விதிகளைப் பொருத்திப் பார்க்கும் திறனாய்வு வகை --------- (4)

6) மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் ஒரு கருவி ------ (6)

செயல்திட்டம்

1. நும் பாடப்பகுதியிலுள்ள கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ச்சொற்களிலிருந்து 50 சொற்களின் வேர்ப்பொருளைக் கண்டறிந்து எழுதுக.

2. நும் ஆங்கில மொழிப்பாடநூலிலிருந்து எவையேனும் 25 தொடர்களை எழுதி, அவற்றைத் தமிழ்த் தொடரமைப்புக் கூறுகளுடன் ஒப்பிட்டு அட்டவணை உருவாக்குக.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 203 04-04-2020 15:04:03

## இணையச்செயல்பாடு

# இலக்கணவியல்

இந்தச் செயல்பாடுகள்மூலம் தொடரியல், எழுவாய், பயனிலை, எச்சத்தொடர் போன்றவற்றை அறியலாம்.



### படிகள்

1. கீழ்காணும் உரலி விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க. அங்கு இலக்கணக்குறிப்பு விரிதரவு என்ற பக்கம் காண்பிக்கும். தொடரியல் மற்றும் பொருண்மையியல் விளக்கத்துடன் கூடிய தமிழ் விரிதரவு என்பதனைத் தேர்வு செய்க.
2. ஒரு பக்கத்தில் அறிமுகம் விரிதரவு என்ற குறியுடன் காட்டும். அதில் விரிதரவு என்பதைத் தேர்வு செய்க.
3. காண்பிக்கும் பக்கத்தில் தேவையான இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
4. அந்தப் பக்கத்தின் நூல் மற்றும் பாடல் எண் தேர்வுசெய்து தேடு என்று சொடுக்கவேண்டும்.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :

படி 1

படி 2

படி 3

படி 4

தொடரியல் இணைய பக்கத்தின் உரலி :

http://www.tamilvu.org/ta/coresite-html-cwannotate-342429

B282_12_ADV_TAMIL

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



12th ADVNCEl Tamil - Chap 3&4.indd 204 04-04-2020 15:04:03